தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

₹10/- மலர் 16 இதழ் 01 மே 2014 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

பசுமையான காய்கறிகளை சாகுபடி செய்யும் அவளூர் கூட்டமைப்பு 6

இளைஞர் திறன் மற்றும் வேலைவாய்ப்பு 17

மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக சில நடவடிக்கைகள் 24

விடுமுறை விற்பனை விழா

மகளிரின் முகவரியாய் மகளிர் திட்டம்!

-சுய உதவிக் குழு மகளிர் பெருமிதம்

திருமதி மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

ஒவ்வொரு மாதமும் சுய உதவிக் குழு மகளிரான உங்களுடன் முற்றம் இதழ் வாயிலாக எனது கருத்துக்களை சொல்லும் தருணம்தான் எனக்கு மிகவும் மகிழ்ச்சியான தருணமாக இருக்கிறது. இம்முறை என் மனதில் தோன்றிய சில விஷயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

கோடை விடுமுறை முடிந்து பள்ளி கல்லூரிகள் திறக்கப்பட்டு விட்டன. சிறகடித்து பறக்கும் பட்டாம் பூச்சிகளாய் மாணவ மாணவியர் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் செல்லத் துவங்கி விட்டனர். தங்களின் பிள்ளைகளை பள்ளி மற்றும் கல்லூரிகளில் சேர்க்கவும், அவர்களுக்குத் தேவையானவற்றை வாங்கித் தருவதிலும் பெற்றோர்கள் பொறுப்புடன் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளனர். இவைகள் அனைத்துமே வருடந்தோறும் வழக்கமாக நடப்பதுதான் என்பது நமக்குத் தெரியும்.

ஆனால் வருடந்தோறும் நமக்குத் தெரியாத பல விஷயங்களும் உள்ளன. கல்வி கற்க முடியாமல் படிப்பை பாதியிலேயே விடுபவர்கள், நல்ல மதிப்பெண்கள் பெற்றும் விரும்பிய கல்வி பெற முடியாமல் மனம் புழுங்குபவர்கள், கல்விக் கட்டணம் கட்ட முடியாமல் ஏழ்மையில் தவிப்பவர்கள் என நம் கவனத்திற்கு வராதவர்களும் நம்மிடையே இன்றும் உள்ளனர். இவர்களை கண்டறிந்து அவர்களுக்கு உதவிட சுய உதவிக் குழுக்கள் முன் வர வேண்டும். ‘காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது’ என்ற வள்ளுவர் பெருந்தகையின் குறள் மொழிக்கேற்ப, நாம் காலமறிந்து செய்யும் சிறு உதவி கூட மிகப் பெரியதாகக் போற்றப்படும். நாம் செய்யும் உதவி எதிர்காலத்தில் சிறந்த சமுதாயம் உருவாக வழி காட்டும்.

ஆண்டுதோறும் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாணவிகளே அதிக அளவில் தேர்ச்சி பெற்று முன்னிலை பெற்று வருகிறார்கள். இவ்வாண்டும் மாணவிகள்தான் முன்னிலை பெற்றுள்ளார்கள். அனைத்துத் துறைகளிலும் பெண்கள் சாதனைகளைப் படைக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் இன்றும் தங்களின் உரிமைக்காக போராடி வரும் நிலைதான் நிலவுகிறது. சில இடங்களில் குறிப்பிட்ட வயதிற்கு மேல் பெண் பிள்ளைகளை படிக்க அனுப்ப மறுத்து, படிப்பை பாதியில் நிறுத்தி விட்டு சிறு வயதிலேயே அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கும் நிகழ்வுகளும் நடக்கிறது. இவைகள் அனைத்தும் பெண்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடும் செயலாகும்.

‘ஒரு ஆண் படித்தால் ஒரு குடும்பம் முன்னேற்றம் அடையும். ஆனால் ஒரு பெண் படித்தால் ஒரு சமுதாயமே முன்னேற்றம் அடையும். எனவே ஆண் பெண் பேதமின்றி அனைவருக்கும் கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்துவோம். பெண் குழந்தைகளை படிக்க வைப்போம். அவர்களின் வாழ்வில் ஒளியேற்றுவோம் என்ற உறுதியினை அனைத்து சுய உதவிக் குழு மகளிரும் தங்களின் உள்ளத்தில் இருத்தி செயல்பட வேண்டும்’ என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

‘ஒரு ஆண் படித்தால் ஒரு குடும்பம் முன்னேற்றம் அடையும். ஆனால் ஒரு பெண் படித்தால் ஒரு சமுதாயமே முன்னேற்றம் அடையும். எனவே ஆண் பெண் பேதமின்றி அனைவருக்கும் கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்துவோம். பெண் குழந்தைகளை படிக்க வைப்போம்.

மேலாண்மை இயக்குநர்

உள்ளே

வளம் நிறைந்த ஏற்காடு மலை

4

தந்தையர் தினம் 5

தற்போது தந்தையர் தினம் உலகெங்கும் ஆண்டுதோறும் ஜூன் 19ஆம் தேதி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இத்தினத்தில் தந்தையருக்கு பரிசுகள் வழங்குதல், விருந்தளித்தல், சிறப்பித்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

குதிக்கால் வலி நீங்க...

14

இளைஞர் திறன் மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சிகள் 17

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் இளைஞர்களுக்கு பல்வேறு தொழில்களில் பயிற்சிகள் தந்து, வேலைவாய்ப்புகள் பெற்றுத் தருவதுடன், சுய தொழில்கள் துவங்கிடவும் வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படுகிறது.

முற்றக் கச்சேரி

இளைஞர் அமைப்பு

26

பெண்களின் அழகைப் பாதுகாக்க... 15

நம் சமையலறையில் பயன்படுத்தும் பொருட்களைப் பயன்படுத்தியே நமது அழகைப் பராமரிக்கலாம். செலவு குறைவாகவும், பக்க விளைவுகள் இல்லாமலும் இருக்கும் அழகுப் பொருட்கள் சிலவற்றை காணலாம்.

8 மகளிர் மேளா 2014

விடுமுறை விற்பனை விழா

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் இக்கண்காட்சிக்கு வருகை தந்து பொருட்களை வாங்கிச் சென்றனர்.

விடுமுறை விற்பனை விழாக் கண்காட்சி, மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு சிறந்த விற்பனை வாய்ப்பை ஏற்படுத்தி தந்துள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 16 இதழ் 01 மே 2014

விலை ரூ. 10/-

கௌரவ ஆசிரியர்
மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
டபிள்யூ. சிராஜுன்னிசா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
ம. மனோகர சிங்
கூடுதல் இயக்குநர்
எம். மாதவி
கூடுதல் இயக்குநர்
எல். ராஜா
கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்
ஆர். வி. ஷஜீவனா
கூடுதல் திட்ட இயக்குநர்
கா. சுஜாதா ஜேக்கப்
கூடுதல் திட்ட இயக்குநர்
மோ. கணேஷ்குமார்
தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்
மு. மேகவர்ணம்
மக்கள் தொடர்பு அலுவலர்

முற்றம் உதவியாளர்
ஏ. கண்ணன்

கணக்கர்
சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
மு. செல்வம்

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

தொலைபேசி: 044-2817 3412 / 3413
தொலைநகல்: 044-2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

குழந்தைத் தொழிலாளர்கள்...

மக்களாட்சி தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி செய்து வரும் நாடுகளில் நமது நாடும் ஒன்று. மிகப் பெரிய நாடான நமது இந்திய நாட்டின் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளை உலகமே உற்று நோக்கிய நிலையில், 543 பாராளுமன்ற தொகுதிகளுக்கும் அமைதியான முறையில் தேர்தல் நடைபெற்று, 16ஆவது மக்களவை தேர்ந்தெடுக்கப்பட்டு புதிய அரசானது மத்தியில் ஆட்சி பொறுப்பை ஏற்றுள்ளது.

'அரசு பொதுவானது, எவ்வித சாதி, மத பாகுபாடுமின்றி, 125 கோடி மக்களின் வளர்ச்சிக்காகவே இந்த அரசு செயல்படும், இது வெறும் முழக்கம் மட்டும் அல்ல செயல் முறையில் காண்பிக்கப்படும்' என்ற புதிய பிரதமரின் முழக்கம் வரவேற்க வேண்டிய ஒன்று. 16ஆவது மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து பிரதி நிதிகளுக்கும் முற்றம் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

கொதிக்கும் வெப்பத்தில் கோடை விடுமுறை கழிந்து, கல்வி நிறுவனங்கள் திறக்கப்பட்டு, இந்த ஆண்டிற்கான பாட திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. இந்நிலையில், கல்வியில் பல தரப்பினரும் தங்களின் கடமை என்ன என்பதை உணர்ந்து செயல்பட வேண்டி உள்ளது. மாணவர்களின் கடமை படிப்பு, அதாவது கற்பது. பெற்றோர்களின் கடமை மாணவர்களின் தேவைகளை நிறை வேற்றுவதோடு, அவர்களின் முன்னேற்றத்தை வலியுறுத்துவது. ஆசிரியர்களின் கடமை மாணவர்களுக்கு அறிவையும், நன்நடத்தைகளையும் கற்று தந்து வழிகாட்டுவது. இந்தக் கடமைகளிலிருந்து ஒருவர் தவறினாலும், கல்வியில் வளர்ச்சி காண்பது கடினம்.

ஒவ்வொரு ஆண்டும் நமது நாட்டில் பள்ளியில் சேருவதற்கு தகுதியுடைய அனைத்து குழந்தைகளும் பள்ளியில் சேருவதில்லை. வறுமை, ஏழ்மை மற்றும் சில பாதகமான சூழ்நிலைகளால், ஒவ்வொரு ஆண்டும் நமது நாட்டின் 15 முதல் 20 சதவீத குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்படாமல் விடுபடுகின்றனர். தமிழகத்தில் இந்த நிலை மிகக் குறைவு என்பது பாராட்டுக்குரியது.

அவ்வாறே தொடக்கப் பள்ளி, நடுநிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிப் படிப்புகள் முடிவதற்கு முன்பே கணிசமான எண்ணிக்கையில் பல மாணவர்கள் பல்வேறு காரணங்களால் பள்ளியை விட்டு இடையில் நின்று விடுகின்றனர். இவ்வாறு பள்ளியில் சேராத பிள்ளைகளும், இடையில் பள்ளி படிப்பை நிறுத்திய பிள்ளைகளும்தான் இன்று குழந்தை தொழிலாளர்களாக உருவெடுத்துள்ளனர்.

அறிவும், ஆற்றலும் வளர்த்துக் கொள்ளும் பிஞ்சு வயதில், தனது வயிற்றுப் பசியைப் போக்கிக் கொள்ளவும், குடும்பத்தின் வறுமையைப் போக்கவும், சிறு வயதிலேயே தொழில் நிறுவனங்களிலும், உணவு விடுதிகளிலும் வியாபார நிறுவனங்களிலும் குறைந்த ஊதியத்திற்கு கடினமான வேலைகளை செய்து வருகின்றனர். சமூக வியாதிகளில் குழந்தை தொழிலாளர் ஒரு முக்கிய வியாதி யாக கருதப்படுகிறது. இந்த பிணியை போக்குவதற்கு அரசு சமுதாயம் மற்றும் குடும்பம் ஆகிய அனைவரும் பாடுபட வேண்டியுள்ளது.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

சந்தாத் தொகையை ‘முற்றம்’ என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தக்க முறையில் வங்கி வரைவோலையாக மட்டுமே அனுப்ப வேண்டும். வங்கி வரைவோலையுடன், சந்தாதாரரின் பெயர், க/பெ. (அ) த/பெ., குழுவின் பெயர், வீட்டு எண், தெரு எண், கிராமத்தின் பெயர், தாலுக்கா பெயர், மாவட்டத் தின் பெயர் ஆகியவற்றுடன் அஞ்சல் குறியீட்டு எண்ணையும் (பின்கோடு எண்) தவறாமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். முற்றம் சந்தாக்களுக்குரிய புத்தகம் அந்தந்த நபருக்கு அனுப்ப வேண்டுமா? அல்லது மொத்தமாக எந்த முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்பதை தெளிவாகக் கடிதத்தில் குறிப்பிட வேண்டும்.

முற்றம் இதழ் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	– ரூ. 100/–
இரண்டு ஆண்டு சந்தா	– ரூ. 150/–
மூன்று ஆண்டு சந்தா	– ரூ. 250/–
நான்கு ஆண்டு சந்தா	– ரூ. 300/–
ஆயுள் சந்தா	– ரூ. 600/–
புரவலர் கட்டணம்	– ரூ. 15,000/–

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகளையும், சுய உதவிக் குழு மகளிரின் வெற்றிக் கதைகளையும், பயனுள்ள செய்திகள் பலவற்றையும் சுய உதவிக் குழு மகளிரான நாங்கள் தெரிந்து கொள்ளும் வகையில் எளிய முறையில் வெளியிட்டு வருகிறது முற்றம் இதழ்.

மீனாட்சி ராமச்சந்திரன்,
மல்லிகை மகளிர் சுய உதவிக் குழு,
சோளிங்கர், வேலூர் மாவட்டம்

புதுவாழ்வு திட்டமும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கமும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்த பல்வேறு கட்டுரைகளையும், கிராமப்புற ஏழை மக்களின் முன்னேற்றம் குறித்த செய்திகளையும், தொழிற்பயிற்சி பெற்றவர்களின் வெற்றிக் கதைகளையும் மாதந் தோறும் வெளியிட்டு வரும் முற்றம் எங்களுக்கு நல்ல தோழி.

காந்திமதி சம்பு,
மகாத்மா மகளிர் மன்றம்,
உடையாப்பட்டி, சேலம் மாவட்டம்.

‘கல்வியைப் போற்றிடுவோம்’ கட்டுரை பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் இருந்தது. வங்கித் தொடர்பாக வெளிவரும் கட்டுரைகள் வங்கிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளது. மிகவும் பயனுள்ளதாக முற்றம் இதழ் இருக்கிறது.

விஜயலட்சுமி கார்த்திக்,
மகிழ்ச்சி மகளிர் சுய உதவிக் குழு,
திருத்தவெளி, காஞ்சிபுரம் மாவட்டம்.

ஏழை மக்களின் வாழ்வில் வளத்தை ஏற்படுத்த செயல்பட்டு வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், புதுவாழ்வுத் திட்டம், கிராம வறுமை ஒழிப்பு சங்கம், சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டம் ஆகியவற்றைக் குறித்த செய்திகள் மிகவும் நன்றாக இருக்கிறது.

சித்ரா ராமதாஸ்,
புதுமை மகளிர் மன்றம்,
ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஏற்காட்டில் அமைந்துள்ள ஏரியில் படகு சவாரி செய்ய சுற்றுலாப் பயணிகள் அதிகம் விரும்புவர்.

வளம் நிறைந்த

ஏற்காடு மலை

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் உள்ள கிராமங்களில் புதுவாழ்வுத் திட்டத்தின் வழிகாட்டுதலுடன் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவைகள் அப்பகுதியில் வசிக்கும் ஏழை மக்களை பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடையச் செய்திட, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. தற்போது அப்பகுதியில் ஏழை மக்களின் வாழ்வாதாரம் செழிப்படைந்து வருகிறது.

சேலம் மாவட்டத்தில் உள்ள சேர்வராயன் மலைத்தொடரில் அமைந்துள்ள ஏற்காடு சுமார் 1623 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. சேலம் நகரில் இருந்து 36 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இந்த மலைக்கு செல்ல 20 கொண்டை ஊசி வளைவுகள் கொண்ட சாலை உள்ளது. இயற்கை எழில் கொஞ்சும் மலைப்பகுதியும், அதனை ஒட்டி அமைந்துள்ள ஏரியும் மிகவும் அழகாக இங்கு காட்சி அளிக்கின்றன. எப்போதும் வெப்ப நிலை குறைவாகவே இருக்கும் என்பதால், இங்கு எப்போதும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாகவே இருக்கும்.

திருமணி முத்தாறு, வசிஷ்ட நதி போன்ற நதிகளின் பிறப்பிட மான ஏற்காட்டில் விவசாயமும், சுற்றுலாவும்தான் முக்கிய தொழிலாகும். வாழை, பலா மற்றும் ஆரஞ்சு பழங்கள் விளைகின்றன. ஏரி, லேடீஸ் சீட், கிள்ளியூர் நீர்வீழ்ச்சி, பகோடா பாயிண்ட், சேர்வராயன் கோவில் என சுற்றுலாப் பயணிகள் சுற்றிப் பார்க்க ஏராளமான இடங்கள் உள்ளன.

ஏற்காட்டில் அமைந்துள்ள ஏரியில் படகு சவாரி செய்ய சுற்றுலாப் பயணிகள் அதிகம் விரும்புகின்றனர். ஏரியின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள நீரூற்றும், ஏரியைச் சுற்றியுள்ள அழகான தோட்டம், ஓங்கி வளர்ந்து நிற்கும் மரங்களும் கண்ணை விட்டு நீங்காத காட்சியாகும். இந்த ஏரிக்கு பக்கத்திலேயே பூங்காவும் இருக்கிறது.

லேடீஸ் சீட் என்ற இடத்தில் இருந்து பார்த்தால், சேலம் நகரின் ஒட்டு மொத்த அழகையும் ரசிக்கலாம். இரவு நேரத்தில் இங்கு இருந்து சேலம் நகரைப் பார்த்தால் நட்சத்திரங்களை வாரி இறைத்தது போல் மிகவும் அழகாக இருக்கும். அதேபோல் பகோடா பாயிண்ட் என்ற இடத்தில் இருந்தும் சேலம் நகரின் அழகை கண்டு களிக்கலாம்.

ஏற்காட்டில் உள்ள கிள்ளியூர் நீர்வீழ்ச்சியில் மழைக் காலத்தில் மட்டுமே நீர் கொட்டும். அடர்ந்த மரங்கள் நிறைந்த பாதை வழியே சென்றால் இந்த நீர்வீழ்ச்சியைக் காணலாம்.

சேர்வராயன் மலை உச்சியில் பழமையான சேர்வராயன் கோவில் அமைந்துள்ளது. இங்கு ஆண்டுதோறும் மே மாதத்தில் நடைபெறும் திருவிழாவில் ஏற்காடு மலையில் வசிக்கும் மக்களும், சுற்றுலாப் பயணிகளும் பெருமளவில் கலந்து கொள்கின்றனர். மேலும் கரடிக் குகை, தாவரவியல் பூங்கா போன்றவையும் சுற்றுலாப் பயணிகள் அதிகம் காணக் கூடிய இடங்களாகும்.

ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் இங்கு மலர்க் கண்காட்சி நடைபெறுகிறது. அரசு சார்பில் கோடை விழாவும் நடைபெறுகிறது. ■

சேலத்தில் இருந்து ஏற்காட்டிற்கு செல்ல சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பரந்து விரிந்த ஏரி, பசுமைப் போர்த்திய தோட்டங்கள், விண்ணை முட்டும் மலைகள் என அனைத்தும் நிறைந்த இடமாக திகழ்கிறது ஏற்காடு.

தினம்...தினம்...

உலக சுற்றுச்சூழல் தினம்

ஆண்டுதோறும் ஜூன் 5ஆம் தேதி உலக சுற்றுச்சூழல் தினம் அனைத்து நாடுகளிலும் கடைப்பிடிக்கப்படுகிறது. உயிர்களின் வாழ்க்கைத் தொடர்பாக பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சனைகளுக்கு மனிதரை எதிர் கொள்ளச் செய்வதும், சுற்றுச்சூழலைக் காப்பதில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இத்தினத்தின் பிரதான நோக்கமாகும். இயற்கை வளங்களான நீர்நிலைகள், காடுகள், கடற்கரைகள், மலைப்பிரதேசங்களில் ஏற்படும் மாசுபாடுகள் சுற்றுச்சுழலை மட்டுமின்றி மனிதர்கள் மற்றும் பிற உயிரினங்களின் வாழ்வுக்கும் அச்சுறுத்தலாகவும், ஆபத்தாகவும் அமைந்துள்ளது. நவீன விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சியின் விளைவாக, ரசாயனக் கழிவுகள், நீர் நிலைகள், வளிமண்டலம் மற்றும் மண் ஆகியவற்றை மாசுபடுத்துகின்றன.

சுற்றுச்சூழலை அழிக்கும் காரணிகளில் இருந்து நம் பூமியைக் காக்கவும், சுற்றுச்சுழல் குறித்த விழிப்புணர்வை அனைத்து தரப்பினரும் பெற்றிடும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள இத்தினத்தில் உறுதி ஏற்போம்.■

யுனிசெப் நிறுவனம் குழந்தைத் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை உடல் ரீதியான பாதிப்பு, உளவியல் அல்லது மனரீதியான பாதிப்பு மற்றும் உணர்வு மற்றும் சமூக ரீதியான பாதிப்பு என மூன்று வகையாகப் பிரித்துள்ளது.

குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம்

ஆண்டுதோறும் ஜூன் 12ஆம் தேதி குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம் கடைபிடிக்கப்படுகிறது. குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக அகற்றப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்த இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது. பள்ளி செல்லும் வயதில் உள்ள குழந்தைகள் வேலைக்குச் செல்லும் நிலை, எதிர்காலத்தில் பல்வேறு பாதிப்புகளை சமுதாயத்தில் ஏற்படுத்தும். எனவே குழந்தைத் தொழிலாளர் முறையை தவிர்க்க அனைவரும் இத்தினத்தில் உறுதி ஏற்போம்.■

தந்தையர் தினம்



வாஷிங்டனைச் சேர்ந்த சோனரோ ஸ்மார்ட் டோட் என்பவர் 1909 ஆம் ஆண்டில் விடுமுறை நாளான ஒரு ஞாயிற்றுக்கிழமை அன்னையர் தினம் குறித்த சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தபோது தந்தையர் தினம் கொண்டாடுவது குறித்த எண்ணம் தோன்றியது. ஜூன் 19, 1910 அன்று அவருடைய தந்தைக்காக ஒரு புகழுரையை ஏற்பாடு செய்தார். அதன் பின்னர் பல்வேறு நிகழ்வுகளுக்குப் பின்னர் தற்போது தந்தையர் தினம் உலகெங்கும் ஆண்டுதோறும் ஜூன் 19ஆம் தேதி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இத்தினத்தில் தந்தையருக்கு பரிசுகள் வழங்குதல், விருந்தளித்தல், சிறப்பித்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன.■

இரத்த தானம் செய்வோர் தினம்

எந்த பிரதி பலனையும் எதிர்பாராமல் மனித நேயத்தை மனதில் கொண்டு இரத்த தானம் செய்பவர்களை சிறப்பிக்கும் விதமாக, ஆண்டுதோறும் ஜூன் 14ஆம் தேதி இரத்த தானம் செய்வோர் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த தினம் இரத்தத்தில் ஏ, ஓ, பி ஆகிய பிரிவுகளை கண்டுபிடித்தமைக்காக நோபல் பரிசு பெற்ற கார்ல் லாண்ட்ஸ்டெய்னெரின் பிறந்த தினமாகும். இரத்த தானம் என்பது ஒருவர் தனது உடலில் உள்ள இரத்தத்தை பிறருக்குப் பயன்படுத்திக் கொள்ளும் மனப்பான்மையுடன் தானமாக வழங்குவது ஆகும். இரத்த தானம் செய்பவர் ஒரே நேரத்தில் 200 முதல் 300 மி.லி. இரத்தம் வரை கொடுக்கலாம். அவ்வாறு கொடுக்கும் இரத்தத்தின் அளவு இரண்டே வாரங்களில் நாம் உண்ணும் சாதாரண உணவின் மூலம் மீண்டும் உற்பத்தியாகிவிடும்.■

அவளூர் கூட்டமைப்பு பசுமையான காய்கறிகளை சாகுபடி செய்கிறது.

பசுமையான காய்கறிகளை

சாகுபடி செய்யும் அவளூர் கூட்டமைப்பு

கிராமப்புற ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் செயல்பட்டு வரும் மகளிர் திட்டம் சுய உதவிக் குழு மகளிருக்கு தொழிற்பயிற்சிகள் பல அளித்து, அவர்களுக்கு வங்கிக் கடன் வாய்ப்புகளை ஏற்படுத்தித் கொடுத்து, தொழில் நடவடிக்கையில் ஈடுபடச் செய்து, தொழில் முனைவோர்களாக வெற்றி நடைபோட வழி வகை செய்து தருகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கிராமப்புற ஏழை மகளிரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதன் பயனாக இன்று சுய உதவிக் குழு மகளிர் பல்வேறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, தொழில் முனைவோர்களாக வெற்றி நடைபோட்டு வருகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சியில் உள்ள அவளூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினர் காய்கறிகளை சாகுபடி செய்து விற்பனை செய்து வருகின்றனர். இக்கூட்டமைப்பினர் தாங்கள் மேற்கொண்டு வரும் தொழில் குறித்தும் நமக்கு அளித்த நேர்காணல்.

உங்கள் கூட்டமைப்பு குறித்து...

எங்கள் கூட்டமைப்பில் மொத்தம் 35 குழுக்கள் உறுப்பினராக இணைந்துள்ளன. அந்தக் குழுக்களில் சுமார் 455 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர்.

நீங்கள் மேற்கொண்டு வரும் தொழில் குறித்து?

எங்கள் பகுதியில் அதிக அளவில் விவசாயம் நடைபெறுகிறது. எனவே விவசாயம் தொடர்பான பணிகளில் ஈடுபடலாம் என்று தீர்மானித்து, காய்கறித் தோட்டம் அமைக்க முடிவு செய்தோம். வளமான மண், போதுமான தண்ணீர் வசதி, தெரிந்த தொழில் முறை, விற்பனை வாய்ப்பு போன்றவை எங்களுக்கு சாதகமாக இருந்ததால், காய்கறித் தோட்டம் அமைக்க முடிவு செய்தோம்.

விவசாயம் குறித்த பயிற்சி பெற்றுள்ளீர்களா?

எங்கள் குழுக்களின் உறுப்பினர்களில் பெரும் பாலானவர்கள் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான். இருப்பினும் வேளாண்மை குறித்த மேலும் பல விபரங்களை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக வேளாண்மைத் துறை மூலம் பயிற்சிகள் பெற்றுள்ளோம்.

வங்கிக் கடன் ஏதேனும் வாங்கியுள்ளீர்களா?

சுழல் நிதி, பொருளாதாரக் கடன் போன்றவை பெற்றுள்ளோம். ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வழங்கப்படும் ஊக்க நிதியும் எங்கள் கூட்டமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது.

எந்தெந்த காய்கள் சாகுபடி செய்யப்படுகிறது?

கத்தரிக்காய், வெண்டைக்காய், பாகற்காய், சுரைக்காய், முள்ளங்கி, பூசணிக்காய், முருங்கைக் காய், பச்சை மிளகாய், தக்காளி போன்ற காய்கறிகளை சாகுபடி செய்து வருகிறோம். சிலசமயங்களில் கீரை வகைகளையும் சாகுபடி செய்கிறோம்.

எங்கள் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான். வேளாண்மை குறித்த மேலும் பல விபரங்களை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக வேளாண்மைத் துறை மூலம் பயிற்சிகள் பெற்றுள்ளோம்.

விவசாயத்திற்கு நீங்கள் எந்த வகை உரங்களைப் பயன்படுத்துகிறீர்கள்?

நாங்கள் இயற்கை உரங்கள், மண்புழு உரம் மற்றும் பஞ்சகாவ்யம் ஆகியவற்றை மட்டுமே பயன்படுத்தி விவசாயம் செய்கிறோம். எந்தவிதமானது இரசாயன உரங்களையும் எப்போதும் பயன்படுத்துவது இல்லை.

இயந்திரங்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்யப்படுகிறதா?

எங்கள் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிறிய அளவில் உள்ள நிலத்தில் மட்டுமே விவசாயம் மேற்கொண்டு பல்வேறு வகையான

காய்களை சாகுபடி செய்கிறோம். கூட்டமைப்பின் உறுப்பினர்களே நேரடியாக விவசாயத்தில் ஈடுபடுவதால் மனித உழைப்பிற்கே முக்கியத்துவம் தருகிறோம். இயந்திரங்களைப் பயன்படுத்துவது இல்லை.

காய்கறிகளை முன்பு எப்படி விற்பனை செய்தீர்கள்?

ஆரம்ப காலகட்டத்தில் நாங்கள் பறிக்கும் காய்களை எடை போடாமல் மூட்டைகளாகக் கட்டி சாலை ஓரத்தில் வைத்து விடுவோம். அப்பகுதி யில் உள்ள சிறு வியாபாரிகள் எங்களிடம் மிகக் குறைந்த விலைக்கு காய்களை வாங்கி, கோயம்பேடு, மாம்பலம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மொத்த வியாபாரிகளிடம் கூடுதல் விலைக்கு விற்று விடுவார்கள். எங்களுக்கு குறைந்த அளவே வருவாய் கிடைத்து வந்தது. வியாபாரிகள் வராத சமயங்களில் உள்ளூர் சந்தைகளில் நாங்களே நேரடியாக விற்பனை செய்து வந்தோம்.

இப்போது எப்படி விற்பனை செய்கிறீர்கள்?

தற்போது குழுக்களிடம் இருந்து நாங்களே காய்களை வாங்கி விற்பனை செய்து வருகிறோம். மகளிர் திட்டம் எங்களுக்கு டாடா ஏஸ் வாகனம் ஒன்றை வழங்கியுள்ளது. அதன் மூலம் பல்வேறு இடங்களுக்கு சென்று காய்களை விற்பனை செய்கிறோம். காய்கள் அதிகம் தேவைப்படுபவர்களுக்கு எங்கள் வாகனத்தின் மூலம் காய்களை ஏற்றிச் சென்று கொடுப்பதன் மூலம் அதிக வருவாய் பெறுகிறோம். உள்ளூரிலும் நடமாடும் காய்கறி அங்காடியாக எங்கள் வாகனத்தின் மூலம் விற்பனை செய்து வருகிறோம்.

பயிர் காப்பீடு செய்திருக்கிறீர்களா?

எங்கள் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் சிறிய அளவிலேயே காய்களை சாகுபடி செய்து வருகின்றனர். எனவே அவைகளுக்கு காப்பீடு செய்வதில்லை.

மாதந்தோறும் கிடைக்கும் வருவாய் எவ்வளவு கிடைக்கிறது?

பல்வேறு வகையான காய்களை எங்கள் உறுப்பினர்கள் சாகுபடி செய்கின்றனர். எனவே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அளவில் வருவாய் கிடைக்கும். இருந்தாலும் காய்களை சாகுபடி செய்யும் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் சராசரியாக மாதந்தோறும் ரூ. 6000/– முதல் ரூ. 8000/– வரை வருவாய் பெறுகின்றனர்.

மகளிர் திட்டம் உங்களுக்கு செய்யும் உதவிகள்?

கிராமப்புறத்தில் ஏழைகளாய் இருந்த பெண்களை குழுவாக ஒன்றிணைத்து, பலவிதமான பயிற்சிகள் தந்து, இன்னைக்கு எங்களை தொழில் முனைவோர்களாக உருவாக்கி, எங்களின் தொழில் வளர்ச்சிக்கு உதவியாக வாகனம் வாங்கிக் கொடுத்து உதவியது மகளிர் திட்டம்தான். அதற்காக நாங்கள் மகளிர் திட்டத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் பல வகையிலும் எங்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று மகளிர் திட்டத்தைக் கேட்டுக் கொள்கிறோம்.

> தற்போது ஒரு வாகனத்தின் மூலம் தான் காய்கறிகளை விற்பனை செய்து வருகிறோம். மேலும் பல வாகனங்கள் வாங்கி, அதன் மூலம் அனைத்துப் பகுதிகளிலும் எங்களின் அவளூர் காய்கறிகளை விற்பனை செய்வோம் என்பதை உறுதியுடன் சொல்லிக் கொள்கிறோம்.

உங்களுடைய எதிர்கால குறிக்கோள் என்ன?

அவளூர் என்றாலே பல்வேறு காய்கறிகள்தான் நினைவிற்கு வரும். இயற்கையான முறையில், சுவையும், சத்தும் நிறைந்த காய்களை சாகுபடி செய்து வருகிறோம். தற்போது எங்கள் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று, ஏழ்மையின் பிடியில் இருந்து விடுபட்டு பொருளாதார வளர்ச்சி பெற்று வருகின்றனர். விவசாயம் செய்வதற்கான நிலத்தை குத்தகைக்கு எடுத்துதான் சாகுபடி செய்கிறோம். சொந்தமாக நிலம் வாங்கி விவசாயம் செய்ய வேண்டும் என்பது எங்களுடைய குறிக்கோள். விரைவில் எங்களின் குறிக்கோள் நிறைவேறும் என்று நினைக்கிறோம்.

தற்போது ஒரு வாகனத்தின் மூலம் தான் காய்கறிகளை விற்பனை செய்து வருகிறோம். விரைவில் மேலும் பல வாகனங்கள் வாங்கி, அதன் மூலம் அனைத்துப் பகுதிகளிலும் எங்களின் அவளூர் காய்கறிகள் விற்பனை செய்வோம் என்பதை உறுதியுடன் சொல்லிக் கொள்கிறோம்.

அவளூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகளும், அதன் உறுப்பினர்களின் அயராத முயற்சிகளும் இன்று அந்தக் கூட்டமைப்பிற்கு வெற்றியைத் தந்துள்ளது. அக்கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பொருளாதார வளர்ச்சி பெற்றுள்ளனர். அவர்கள் மேலும் சிறப்பாக செயல்பட்டு பல்வேறு சாதனைகள் படைப்பார்கள் என்பது உறுதி. ■

விடுமுறை விற்பனை விழா கண்காட்சி 30.04.2014 முதல் 18.05.2014 வரை நடைபெற்றது.

மகளிர் மேளா 2014

விடுமுறை விற்பனை விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு, மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. கிராம அங்காடிகள், கல்லூரி சந்தைகள் மற்றும் பல்வேறு கண்காட்சிகள் மூலமாக சுய உதவிக் குழு மகளிர் தயாரிக்கும் பொருட்களின் விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திட தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மகளிரின் முன்னேற்றத்திற்காக, அரசின் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

சுய உதவிக் குழு மகளிர் தயாரிக்கும் பொருட்கள் தரமாகவும், நியாயமான விலையிலும், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத பொருட்களால் உருவாக்கப் படுவதாலும் அனைவரின் வரவேற்பையும் பெற்றுள்ளன.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்திடும் நோக்கிலும், விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திடும் வகையிலும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னையில் மாநில அளவில் பண்டிகை மற்றும் விடுமுறைக் காலங்களில் விற்பனைக் கண்காட்சிகளை நடத்தி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், இவ்வாண்டு கோடை விடுமுறையை முன்னிட்டு 'விடுமுறை விற்பனை விழா' என்ற பெயரில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி, சென்னை, நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 30.04.2014 முதல் 18.05.2014 வரை நடைபெற்றது.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் இக்கண்காட்சிக்கு வருகை தந்து பொருட்களை வாங்கிச் சென்றனர்.

இக்கண்காட்சியில், மாவட்டங்களில் மட்டுமே கிடைக்கக் கூடிய பிரத்யேகப் பொருட்களான கடலூர் முந்திரி, தருமபுரி புளி, திண்டுக்கல் ஜமுக்காளம், ஈரோடு கைத்தறி மற்றும் ஆயத்த ஆடைகள், காஞ்சிபுரம் பட்டு துப்பட்டாக்கள், கன்னியாகுமரி எம்பிராய்டரி துணிகள், கரூர் கைப்பைகள், கிருஷ்ணகிரி டெரகோட்டா பொருட்கள், மதுரை மல்லி, நாகப்பட்டினம் மூங்கில் பொருட்கள், நீலகிரி தேயிலை பொருட்கள், நாமக்கல் கைத்தறி துண்டுகள், பெரம்பலூர் ஸ்படிக மணி மாலைகள்,

புதுக்கோட்டை சிறு தானிய வகைகள், இராமநாதபுரம் பனை ஓலை மற்றும் கடல் பொருட்கள், சேலம் ஆடை வகைகள், சிவகங்கை புகழ் பெற்ற குத்து விளக்குகள், திருவண்ணாமலை ஆரணி காட்டன் சேலைகள், தஞ்சாவூர் பொம்மைகள், தேனி மெழுகுவர்த்திகள், திருவள்ளூர் காகிதப் பொருட்கள், திருநெல்வேலி பத்தமடை பாய்கள், திருச்சி குந்தன் நகை வகைகள், திருப்பூர் கைத்தறி துணி வகைகள், வேலூர் தோல் பைகள், விருதுநகர் காராசேவு, விழுப்புரம் தரை விரிப்புகள் என தரமான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

இந்தக் கண்காட்சியில் பல்வேறு மாவட்டங்களில் பிரசித்திப் பெற்ற பாரம்பரிய உணவு வகைகள் சுவையாகவும் சுகாதார மான முறையிலும் தயாரித்து செய்து சுடச்சுட விற்பனை செய்யப்பட்டது. கோடையை சமாளிக்கும் வகையில் உடலுக்கு குளிர்ச்சியும் வலுவும் ஆரோக்கியமும் தரும் நுங்கு, இளநீர் போன்றவையும் விற்பனை செய்யப்பட்டது. மேலும் கண்காட்சி வளாகத்திலேயே சுய உதவிக் குழு மகளிரால் தயாரிக்கப்பட்ட சுவையான பிஸ்கட், கேக், சாக்லேட் போன்றவையும் விற்பனை செய்யப்பட்டது.

இக்கண்காட்சியில் வாடிக்கையாளர்களை மகிழ்விக்கும் வகையில் யோகா, மேஜிக் ஷோ உட்பட பல்வேறு பொழுது போக்கு அம்சங்களும் இடம் பெற்றிருந்தன. குழந்தைகள் விளையாடுவதற்கு ஏற்ப பல விளையாட்டு சாதனங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

சுய உதவிக் குழு மகளிரின் உற்பத்திப் பொருட்கள் தர மாகவும், நியாயமான விலையிலும், சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையிலும் இருப்பதால் பொதுமக்கள் ஆர்வத்துடன் இக்கண்காட்சிக்கு வருகை தந்து தங்களுக்குத் தேவையானப் பொருட்களை பெருமளவில் வாங்கிச் சென்றனர். அரசு உயர் அதிகாரிகள், திரைப்பட நட்சத்திரங்கள், கல்லூரி மாணவ மாணவிகள் என அனைத்துத் தரப்பினரும் இக்கண்காட்சிக்கு ஆர்வமுடன் வருகை தந்து பொருட்களை வாங்கிச் சென்றது, சுய உதவிக் குழுக்களுக்கு உற்சாகத்தையும், அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு அங்கீகாரத்தையும் பெற்றுத் தந்துள்ளது.

30.04.2014 முதல் 18.05.2014 வரை நடைபெற்ற விற்பனைக் கண்காட்சியில் ரூ. 24 இலட்சம் மதிப்பிற்கு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. கண்காட்சியின் நிறைவு நாளன்று கண்காட்சியில் அரங்குகள் அமைத்திருந்த சுய உதவிக் குழு மகளிர் அனைவரும் ஒன்று சேர்ந்து சமத்துவப் பொங்கல் வைத்து மகிழ்ந்தனர்.

தரமான வீட்டு உபயோகப் பொருட்கள், சத்து நிறைந்த நாவுக்கினிய உணவு வகைகள், கோடையை குளிர்விக்கும் இயற்கை பானங்கள் என மகளிர் மேளா விடுமுறை விற்பனை விழாக் கண்காட்சியில், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு சிறந்த விற்பனை வாய்ப்பை இக்கண்காட்சி ஏற்படுத்தி தந்துள்ளது.

கண்காட்சியின் நிறைவு நாளன்று கண்காட்சியில் அரங்குகள் அமைத்திருந்த அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழு மகளிர் அனைவரும் ஒன்று சேர்ந்து சமத்துவப் பொங்கல் வைத்து மகிழ்ந்தனர்.

விற்பனைக் கண்காட்சி நிறைவு விழா

‘விடுமுறை விற்பனை விழா 2014’ கோடைக்கால விற்பனைக் கண்காட்சியில் சிறப்பாக அரங்குகள் அமைத்த மற்றும் அதிக அளவில் பொருட்களை விற்பனை செய்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் விழா 19.05.2014 அன்று அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் இவ்விழாவிற்கு தலைமையேற்று, சிறப்பாக அரங்குகள் அமைத்த மகளிர் திட்டம், புதுவாழ்வு திட்டம், மாற்றுத் திறனாளிகள், திருநங்கையர், சிறைத்துறையினர் ஆகிய சுய உதவிக் குழுக்களின் மகளிர், விற்பனை மேலாளர்கள், சமுதாய வள பயிற்றுனர்கள் மற்றும் பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார்.

இவ்விழாவில் மேலாண்மை இயக்குநர் அவர்கள் பேசும்போது, ‘மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு, சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை மேம்படுத்தி, மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் சந்தைப்படுத்த, ‘மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்’

அமைத்து, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சென்னையில் ஒரு முகவரி கிடைக்கச் செய்துள்ளது என்றால் அது மிகையாகாது.

இதுபோன்ற நல்ல வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்கள் அனைவரும் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வேண்டும். பழங்குடியினர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் தயாரிப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதத்தில் சிறப்பு கண்காட்சிகள் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் வருடம் முழுவதும் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் கண்காட்சிகளை நடத்தி, சுய உதவிக்குழு மகளிரின் வாழ்வாதாரம் மேம்பட இவ்வரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

19 நாட்கள் நடைபெற்ற இந்தக் கண்காட்சியில் 24 இலட்சம் ரூபாய்க்கு பொருட்களை விற்பனை செய்து சாதனை படைத்த சுய உதவிக் குழுக்களுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள் முனைவர் ம. மனோகர சிங், திருமதி. எம். மாதவி, திரு. எல். ராஜா, புதுவாழ்வு திட்ட கூடுதல் திட்ட இயக்குநர் திருமதி. சுஜாதா ஜேக்கப் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சான்றிதழ் வழங்கும் விழாவில் கருத்துக்களை பகிர்ந்து கொண்ட சுய உதவிக் குழு மகளிர் 'மகளிருக்கு ஒரு முகவரியாக மகளிர் திட்டம் அமைந்துள்ளது' என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டனர்.

'விடுமுறை விற்பனை விழா 2014' கண்காட்சியில் மகளிர் திட்டத்தைச் சேர்ந்த காஞ்சிபுரம் மாவட்டம் ரூ. 1,27,025/–க்கு விற்பனை செய்து முதலிடத்தையும், சென்னை மற்றும் ஈரோடு மாவட்டங்கள் முறையே ரூ. 1,14,315/– மற்றும் ரூ. 1,01,365/–க்கு விற்பனை செய்து இரண்டு மற்றும் மூன்றாம் இடத்தையும் பெற்றன. காஞ்சிபுரம் மாவட்ட புதுவாழ்வு திட்டத்தை சேர்ந்த சுய உதவிக் குழுக்கள் ரூ. 1,60,935/க்கு விற்பனை செய்தமைக்காக சான்றிதழ் பெற்றது.

சிறப்பாக அரங்குகள் அமைத்ததற்காக திருவள்ளூர், சேலம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சேர்ந்த குழுக்கள் முறையே முதல், இரண்டு மற்றும் மூன்றாம் இடத்தைப் பிடித்தனர். கடலூர் மாவட்டம் பேர்பெரியாங்குப்பம் – 18 மகளிர் சுய உதவிக் குழுவிற்கு, அதிக அளவில் வாடிக்கையாளர்களை ஈர்த்ததற்காக சான்றிதழ் வழங்கப்பட்டது.கண்காட்சி சிறப்பாக அமைய பணியாற்றிய விற்பனை மேலாளர்கள், சமுதாய வள பயிற்றுநர்கள் மற்றும் பங்கேற்பாளர்களுக்கும் மேலாண்மை இயக்குநர் அவர்களால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ■

மாணவர்கள் வங்கியில்

கல்விக் கடன் பெறுவது எப்படி...?

மாணவர்களின் மேற்படிப்பிற்கு வங்கிகள் வழங்கும் கல்விக் கடன் பெரும் உதவியாய் உள்ளது.

இந்தியாவின் மிகப் பெரிய தேசிய வளம், அதன் இளைஞர்கள்தான். நன்கு படிக்கிற மாணவர்கள் தொடர்ந்து கல்வி கற்பதில் பணப் பிரச்சனைகள் ஏற்பட்டால் அவர்களுக்கு உதவுவதற்காக கல்விக் கடன் வழங்கும் திட்டம் கடந்த 2005ஆம் ஆண்டு முதல் அமலில் இருந்து வருகிறது. மத்திய அரசு, ரிசர்வ் வங்கியின் அறிவுரையின்படி சுமார் 27 தேசியமயமாக்கப்பட்ட பொதுத்துறை வங்கிகளும், சில தனியார் வங்கிகளும் மாணவர்களுக்கு கல்விக் கடன் வழங்கி வருகின்றன.

ஒவ்வொரு வங்கியும் கடன் பெறுவதற்குச் சில தகுதிகளை வகுத்திருக்கிறது. வட்டி விகிதம், அதனைத் திருப்பிச் செலுத்தும் விதம் போன்றவைகள் வங்கிக்கு வங்கி மாறுபடலாம்.

வங்கிக் கடன் பெற தேவையான அடிப்படை தகுதிகள் என்ன?

விண்ணப்பிப்பவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். நல்ல மதிப்பெண்ணுடன் எந்த கல்வி கற்கிறாரோ அதற்கான முழு தகுதியும் பெற்றிருக்க வேண்டும்.

எந்தெந்தப் படிப்புகளுக்கு கல்விக் கடன் கிடைக்கும்?

பள்ளிப் படிப்பு, இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டப் படிப்புகள், முனைவர் பட்டப் படிப்புகள், பொறியியல், விவசாயம், மருத்துவம், கால்நடை மருத்துவம், சட்டம், பல் மருத்துவம், கணினி, மேலாண்மை,

எந்த நாடு கல்வியில் சிறந்து விளங்குகிறதோ அந்நாடு அனைத்து வளங்களையும் கொண்ட நாடாக உருவாகும்.

பல்கலைக் கழகங்களால் அங்கீகரிக்கப்பட்ட கணினி சான்றிதழ் படிப்புகள், CA, ICWA, CFA போன்ற படிப்புகள் போன்றவைகளுக்கும், வெளிநாடுகளில் உள்ள பல்கலைக் கழங்களில் அங்கீகரிக்கப்பட்ட சில படிப்புகளுக்கும் வங்கிகளால் கல்விக் கடன் வழங்கப்படுகிறது. சான்றிதழ் படிப்புகளுக்குப் பொதுவாக வங்கிகள் கடன் வழங்குவதில்லை. இருப்பினும் வங்கியில் இது குறித்து விசாரிக்கவும்.

கல்விக் கடன் என்பது மாணவர்களின் படிப்புத் திறமையைப் பொறுத்து வழங்கப்படுகிறது. அந்தக் கடனை சரியான நேரத்தில் திரும்பச் செலுத்த வேண்டியது உங்களின் கடமையாகும். திறமை உள்ள எவருக்கும் படிப்பதற்கான வாய்ப்பு தரப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் வங்கிகள் பலவிதங்களிலும் உதவுகின்றன. இதில் கல்விக் கடன் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

வங்கிக் கடனுக்கு விண்ணப்பிக்க என்னென்ன ஆவணங்கள் தேவை?

10 மற்றும் 12வது மதிப்பெண் சான்றிதழ்கள், கல்லூரி அட்மிஷன் கார்டு, கட்டணங்கள் மற்றும் இதர செலவுகள் குறித்த விவரம், மாணவரின் புகைப்படங்கள், 6 முதல் 12 மாதங்கள் வரையிலான வங்கி அறிக்கை / கடந்த சில வருடங்களுக்கான வருமான வரி அறிக்கை, வருவாய் ஆதாரம், சொத்துக்கள், கடன்கள், வங்கிக் கணக்கு இல்லையெனில் மாணவரின் இருப்பிடச் சான்று, அடையாளச் சான்றுகள் வழங்கப்பட வேண்டும்.

எவ்வளவு கல்விக் கடன் வழங்கப்படுகிறது?

பொதுவாக இந்தியப் படிப்புகளுக்கு ரூ. 15 லட்சம் வரையிலும், வெளிநாட்டு படிப்புகளுக்கு ரூ. 25 லட்சம் வரையிலும் கல்விக் கடன் வழங்கப்படுகிறது. மேலும் விபரங்களை வங்கியில் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கல்விக் கடனை திருப்பச் செலுத்துவது எவ்வாறு?

படிப்பை முடிக்கும் வரையில் கல்விக் கடனை திரும்பச் செலுத்த வேண்டியதில்லை. படிப்பை முடித்த பின்னர் 6 முதல் 12 மாதம் வரை கால அவகாசம் வழங்கப்படும். அதன் பின்னர் கடனை திரும்பச் செலுத்தினால் போதுமானது.

படிப்பை பாதியில் நிறுத்தினாலோ, ஒரு வருடத் திற்குள் வேலை கிடைக்கவில்லை என்றாலோ கடனை எப்படி திரும்ப செலுத்த வேண்டும்?

இத்தகைய சூழ்நிலையில் உடனடியாக கல்விக் கடனை வங்கிக்கு கட்ட வேண்டும். இருப்பினும் வங்கியில் இது குறித்த விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

கல்விக் கடனுக்கான வட்டி எவ்வளவு கணக்கிடப்படும்?

படிப்பை முடிக்கும் வரை சாதாரண வட்டி விகிதம்தான் கணக்கிடப்படும். இந்தக் கால கட்டத்தில் நீங்கள் விரும்பினால் வட்டியை மட்டும் வங்கிக்கு செலுத்தலாம் அல்லது செலுத்தாமலும் இருக்கலாம். வேலை கிடைத்த பின் வட்டியும் அசலும் வங்கிக்கு செலுத்த வேண்டும்.

கல்விக் கடன் பெறுவதற்கு சொத்துக்களை ஈடாக வைக்க வேண்டுமா?

4 லட்சம் ரூபாய் வரையிலான கடன்களுக்கு ஈடாக எதையும் வைக்கத் தேவையில்லை. அதேசமயம் கடன் ஆவணங்களில் மாணவர், அவருடைய பெற்றோர் அல்லது காப்பாளர் கையெழுத்திட வேண்டும்.

> ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்கு மட்டுமே கடன் வழங்கப்படும் என்று எந்தவித கட்டுப்பாடும் வங்கிகளிடம் இல்லை. இருப்பினும் உங்களால் கடனை திரும்பச் செலுத்த முடியுமா என்பதை வங்கி அதிகாரிகள் ஆராய்ந்து உறுதி செய்வார்கள்.

வங்கிகள் இல்லாத ஊரில் வசிப்பவர்கள் கல்வி கடன் எங்கு பெறுவது?

அருகில் உள்ள ஊர்களில் வங்கிக் கிளைகள் இருந்தால் அந்த வங்கிக் கிளைகளில் கல்விக் கடன் கோரலாம்.

கல்விச் செலவு முழுவதற்கும் கல்விக் கடன் கிடைக்குமா?

கல்விச் செலவு முழுவதற்கும் வங்கிக் கடன் கிடைக்காது. குறிப்பிட்ட விழுக்காடு தொகையை குறைத்துக் கொண்டுதான் வங்கிகள் கடன் வழங்கும். உள்நாட்டு படிப்புகளுக்கும் வெளிநாட்டு படிப்புகளுக்கும் இந்த பிடித்த தொகை விகிதம் மாறுபடும். எனினும் வங்கியில் இது குறித்த விபரங்களை கேட்டுக் கொள்ளலாம்.

கல்விக் கடனுக்கு பரீசிலனை கட்டணம் செலுத்த வேண்டுமா?

கல்விக் கடன்களுக்கு பரிசீலனைக் கட்டணம் எதையும் பெரும்பாலும் வங்கிகள் வசூலிப்பதில்லை. இருப்பினும் வங்கிக்கு வங்கி இந்த முறை மாறுபடலாம்.

கல்விக் கடனை எத்தன ஆண்டுகளுக்குள் திரும்பச் செலுத்த வேண்டும்?

பொதுவாக கல்விக் கடன்களை ஐந்து முதல் ஏழு வருடங்களுக்குள் திரும்பச் செலுத்த வேண்டும். கடன் தொகை அதிகமாக இருப்பின் நீண்ட காலம் எடுத்துக் கொள்ளலாம். இத்தகைய கடன்களுக்கு எட்டு ஆண்டுகள் வரை மட்டுமே வருமான வரிச் சலுகைகள் உள்ளன. கடனை செலுத்த எட்டு ஆண்டுகளுக்கு மேல் ஆனால் வரிச்சலுகைகள் கிடைக்காது. எனவே விரைவில் கடனை செலுத்துவதே சிறந்தது.

கல்விக் கடன் பெறுவதில் வேறு ஏதேனும் பலன் உண்டா?

கல்விக் கடனுக்கு சில வங்கிகள் அரை சதவிகிதம் முதல் ஒரு சதவிகிதம் வரை குறைவாக வட்டி நிர்ணயம் செய்கின்றன. தனிநபர் காப்பீடு, குழு ஆயுள் காப்பீடு போன்ற வசதிகளையும் சில வங்கிகள் வழங்குகின்றன.

கல்விக் கடனுக்கு காப்பீடு கிடைக்குமா?

சில வங்கிகள் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி உங்களுடைய கல்விக் கடனைப் பாதுகாக்கும் காப்பீடு ஒன்றினை எடுத்துக் கொள்ளச் சொல்வார்கள். ஒருவேளை வங்கியால் கடனை உங்களிடமிருந்து வசூலிக்க முடியாவிட்டால், காப்பீட்டிலிருந்து கடன் தொகையை எடுத்துக் கொள்வார்கள்.

ஒரு குடும்பத்தில் ஒருவருக்குத் தான் கல்விக் கடன் வழங்கப்படுமா?

ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்கு மட்டுமே கடன் வழங்கப்படும் என்று எந்தவித கட்டுப்பாடும் வங்கிகளிடம் இல்லை. இருப்பினும் உங்களால் கடனை திரும்பச் செலுத்த முடியுமா என்பதை வங்கி அதிகாரிகள் ஆராய்ந்து உறுதி செய்வார்கள். ஏற்கனவே உங்கள் குடும்பத்தில் ஒருவர் கல்விக் கடன் பெற ஈடாக சொத்துப் பத்திரங்களை வங்கிக்கு அளித்திருந்தால், அதன் மதிப்பை கணக்கிட்டு, சொத்துக்களின் மதிப்பு அதிகமாக இருந்தால் அதை ஏற்றுக் கொண்டு கல்விக் கடன் வழங்க வங்கிகள் முன்வரலாம்.



கல்லூரியில் பல்வேறு வகையான கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. எந்தெந்த தேவைகளுக்கு கல்விக் கடன் வழங்கப்படும்?

கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், டியூசன் கட்டணம், தேர்வுக் கட்டணம், நூலகம்/ஆய்வுக் கட்டணம், புத்தகம், சீருடை போன்றவை வாங்குவதற்கான கட்டணம், வெளிநாட்டுப் படிப்பிற்கான பயணச் செலவு போன்ற செலவினங்களுக்கான தொகையை கல்விக் கடனில் செலுத்த முடியும். மற்றபடி தனியார் கல்லூரிகளில் கேட்கப்படும் நன்கொடை, நுழைவு நன்கொடை (கேப்பிடேஷன் பீஸ்) போன்றவற்றுக்கு கல்விக் கடன் கிடைக்காது. தேர்வுக் கட்டணம் போன்றவை குறித்து முன்கூட்டியே குறிப்பிடுவது நல்லது. படிப்பிற்கு கம்ப்யூட்டர் தேவைப்பட்டால் அதை வாங்குவதற்கு சில வங்கிகள் கடன் தருகின்றன. இருப்பினும் வங்கியைத் தொடர்பு கொண்டு எந்தெந்த செலவினங்களுக்கு கடன் தரப்படுகிறது என்பதை அறிந்து கொள்வது நல்லது.

ரூ. 4 லட்சத்துக்கு மேல், ரூ. 7.50 லட்சத்துக்குள் கடன் பெற்றால், இந்த ஆவணங்கள் மட்டும் போதாது. கூடுதலாக, நீங்கள் கடனை திரும்பச் செலுத்தி விடுவீர்கள் என்று உத்தரவாதம் அளித்து ஒருவர் கையெழுத்திட வேண்டும்.

ரூ. 7.5 லட்சத்துக்கு மேல் உள்ள கடன்களுக்கு நீங்கள் ஏதேனும் சொத்து அல்லது முதலீட்டுப் பத்திரங்களை வங்கிக்குத் தர வேண்டியிருக்கும். (உதாரணமாக தேசிய சேமிப்புப் பத்திரங்கள், காப்பீட்டு பத்திரங்கள், வங்கி முதலீடுகள், வீடு, நிலம், தங்கம் போன்ற சொத்துக்கள்) நீங்கள் வழங்கும் சொத்துக்கள் அல்லது முதலீட்டுப் பத்திரங்கள் தான் வங்கிக்கான உத்தரவாதம். நீங்கள் கடனை திரும்பச் செலுத்தாவிட்டால், வங்கி நீங்கள் ஈடாக வைத்த சொத்துக்களை விற்றுத் தங்களுக்கு சேர வேண்டிய தொகையை திரும்பப் பெற்றுக் கொள்வார்கள்.

ரூ. 4 லட்சத்திற்கு மேற்பட்ட கடன்களுக்கு வங்கிகள் தனிநபர் உத்தரவாதம் மற்றும் சொத்து / முதலீட்டுப் பத்திரங்களை ஈடாக கேட்கலாம். நீங்கள் கடனை திரும்பச் செலுத்தாதபட்சத்தில் வங்கி உங்களுக்கு உத்தரவாதம் வழங்கியவர்களிடமிருந்து கடன் தொகையை செலுத்தும்படி கோரலாம். அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்.

குறிப்பிட்ட கல்வி நிறுவனங்களில் சேருவதற்கு மட்டும்தான் கல்விக் கடன் வழங்கப்படுமா?

குறிப்பிட்ட கல்வி நிறுவனங்களில் படிப்பதற்கு மட்டும்தான் கல்விக் கடன் வழங்கப்படும் என எந்த வங்கியும் சொல்வதில்லை. சில கல்வி நிறுவனங்கள் வங்கிகளுடன் இணைந்து கல்விக் கடன் வழங்கு ஏற்பாடுகளை செய்கின்றன. இது குறித்து நீங்கள் படிக்க விரும்பும் கல்வி நிறுவனங்கள், கடன் கோரும் வங்கி ஆகியவற்றிடம் விசாரித்து தெரிந்து கொள்ளுங்கள்.

கல்விக் கடனை எந்த முறையில் வழங்குவார்கள்?

கல்விக் கட்டணம் நீங்கள் படிக்க சேரும் கல்வி நிறுவனத்திற்கு நேரடியாக வங்கி மூலம் வழங்கப்பட்டுவிடும். அதன் பிறகு ஒவ்வொரு வருடமும் மாணவர்கள் படிப்பு செலவைத் தனிப் படிவத்தில் நிரப்பி விண்ணப்பம் அனுப்பினால், அந்தத் தொகையும் நேரடியாக கல்வி நிறுவனத்திற்கு அனுப்பப்படும். வெளிநாட்டு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் அந்நாட்டு கரன்ஸியில் வழங்கப்படும். அதற்கான பரிமாற்ற செலவைப் பெரும்பாலும் மாணவர்கள்தான் ஏற்க வேண்டும்.

கல்விக் கடன் விண்ணப்பத்தை எவ்வாறு அனுப்புவது?

சில வங்கிகள் கடன் விண்ணப்பத்தை இணையதளம் வாயிலாக மட்டுமே அனுப்பும்படி சொல்கின்றன. சில வங்கிகள் பதிவுத் தபாலிலும் விண்ணப்பங்களை அனுப்பும்படி சொல்கின்றன. பதிவுத் தபாலில் அனுப்பினால் அதற்கான அத்தாட்சியை கைவசம் வைத்திருப்பது நல்லது.

கடன் விண்ணப்பத்தை வங்கிகள் ஏற்க மறுத்தால் என்ன செய்வது?

கல்விக் கடன் கோரி நீங்கள் அனுப்பும் விண்ணப்பத்தை வங்கிகள் ஏற்க மறுத்தால், வங்கி மேலாளரை நேரில் சந்தித்து உரிய காரணத்தை கேட்கலாம். திறமை மிகுந்த மாணவர்களின் படிப்பிற்கு எவ்வகையிலும் தடை ஏற்படக் கூடாது என்ற நோக்கத்துடன், வங்கிகள் பல்வேறு உதவிகளையும் செய்து வருகின்றன. அதில் ஒன்றுதான் கல்விக் கடன். இந்தக் கடன் தொகை தகுதி வாய்ந்தவர்களுக்கு கிடைக்க வேண்டும், அவர்கள் படிப்பில் சாதனை படைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் ஒன்றான கல்விக் கடனை பெற முயற்சிக்கும் மாணவர்களுக்கு பொதுவாக எழும் சந்தேகங்களை போக்கும் வகையில் இந்த கட்டுரையில் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கல்விக் கடன் பெற முயற்சிக்கும் மாணவர்கள் தங்களின் விண்ணப்பங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து வங்கிக்கு தரவும். வங்கி அதிகாரிகளிடம் பணிவாகவும், அவர்களின் கேள்விகளுக்கு உரிய பதில்களை பொறுமையுடனும் சொல்லவும். பெற்ற வங்கிக் கடனை உரிய முறையில் திருப்பிச் செலுத்துவதன் மூலம் பிற மாணவர்களும் பயன் பெற முடியும்.

எனவே மாணவர்களே கல்விக் கடன் பெற்று, சிறந்த முறையில் பயின்று வாழ்வில் வெற்றி பெற்று, சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பயன்தரும்செயல்கள்பலபுரிந்துசிறந்தகுடிமகன்என்றசிறப்பினை பெற வேண்டும் என்று முற்றம் உங்களை வாழ்த்துகிறது. ■

உடல் நலத்திற்கு உகந்த கரிசலாங்கண்ணிக் கீரை

கீரை வகைகளில் மருத்துவப் பயன் நிறைந்தது கரிசலாங்கண்ணி கீரையாகும். கொஞ்சம் உஷ்ணத்தை அளிக்க கூடியது என்றாலும், இந்தக் கீரையில் சத்துக்கள் நிறைய உள்ளன. மஞ்சள் கரிசலாங்கண்ணி மற்றும் வெள்ளைக் கரிசலாங்கண்ணி என இரண்டு வகைகள் உள்ளன.

கரிசலாங்கண்ணி இலைகளை உள்ளங் கையில் தேய்த்து கசக்கினால் அந்த இடம் கருப்பாக மாறிவிடும். இதனால் இந்தக் கீரையிலிருந்த தைலம் தயாரித்து தலையில் தேய்த்துக் குளித்து வருவதால் பார்வை தெளிவுடன் தலை முடியும் கருமையாகவும் பளபளப்புடனும் விளங்கும்.

மஞ்சள் கரிசலாங்கண்ணி கீரையை சாப்பிடுவதன் மூலம் மஞ்சள் காமாலை நோயின் தாக்குதலில் இருந்த நம்மைக் காத்துக் கொள்ளலாம். சிலருக்கு கிறுகிறுப்பு மற்றும் பார்வை இருண்டு போவது போன்றவை ஏற்படும். அவர்கள் இந்தக் கீரையை சாப்பிடுவதன் மூலம் குணம் பெறலாம். உடல் உள்ளுறுப்புகளில் ஏற்படும் வேண்டாத நீர்க்கசிவுகளை தடுக்கும் ஆற்றலும், நோய்க்கிருமிகளை அழிக்கும் ஆற்றலும் இந்தக் கீரைக்கு உள்ளது.

பித்த சம்பந்தமான நோய்கள் எல்லாவற்றிற்கும் இது சிறந்த நிவாரணியாகும். குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்த நோய்களை குணமாக்க வல்லது. குழந்தைகளுக்கு சளி அதிகம் சேர்ந்து திணறும் நிலையில் இதன் சாற்றைக் கொடுத்தால் அடைப்பு நீங்கி விடும்.

பெண்களுக்கு தொல்லை தரும் பெரும்பாடு என்னும் வியாதியை குணமாக்க இதன் சாற்றை கஷாயம் தயாரித்துக் கொடுக்கலாம்.

பாம்பு போன்ற விஷ ஜந்துக்கள் கடித்து விட்டால் இதன் சாற்றை உள்ளுக்குக் கொடுக்க விஷம் உடலில் பரவாமல் தடுக்கப்படும். ஆறாமல் தொல்லைக் கொடுக்கும் சரும நோய்களை தீர்க்க, இக்கீரையை மை போல அரைத்துக் வெளிப்பூச்சாக பயன்படுத்தலாம்.

பற்களுக்கு வலுவையும் பளபளப்பையும் அளிக்க வல்லது. வழுக்கையையும் நரையையும் போக்க வல்லது. ஆரம்ப நிலையில் இருக்கும் புற்று நோய்களை பரவாமல் தடுக்கும் ஆற்றல் இந்தக் கீரைக்கு உண்டு. எனவே இந்தக் கீரையை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ளலாம். ■

> கரிசலாங்கண்ணிக் கீரை குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்த நோய்களை குணமாக்க வல்லது. குழந்தைகளுக்கு சளி அதிகம் சேர்ந்து திணறும் நிலையில் இதன் சாற்றைக் கொடுத்தால் சளி அடைப்பு நீங்கி விடும்.

புதினா கொத்தமல்லி துவையல்

தேவையான பொருட்கள்

புதினா, கொத்தமல்லி – ஒரு கப், மிளகு – 1/4 டீஸ்பூன், உளுத்தம் பருப்பு – 2 டேபிள் ஸ்பூன், பச்சை மிளகாய் – 1, பெருங்காயம் – ஒரு சிட்டிகை, உப்பு – தேவையான அளவு.

செய்முறை

உளுத்தம் பருப்பு, மிளகு ஆகியவற்றை வெறும் வாணலில் வறுத்துக் கொள்ளவும். அதனுடன் பச்சை மிளகாய், புதினா, கொத்தமல்லி, பெருங்காயம், உப்பு ஆகியவற்றை சேர்த்து, நீர் விட்டு அரைக்கவும். சுவையும் சத்தும் நிறைந்த இந்த புதினா கொத்தமல்லி துவையலை சுடுசாதத்துடன் சேர்த்து பிசைந்து சாப்பிடலாம். அடிக்கடி இந்த துவையலை சாப்பிட்டால் செரிமாணம் ஆவதுடன், பித்தம் தணிந்து சருமம் மினுமினுக்கும். ■

எஸ். விஜயலட்சுமி
சக்ஸஸ் சுய உதவிக் குழு, நீலகிரி.

குதிக்கால் வலி நீங்க...

உடல் எடை அதிகரிப்பு, அளவுக்கு அதிக மாக வேலை செய்தல், கால்களுக்கு பொருத்தமில்லாத செருப்புகள் அணிதல், கால் எலும்பில் அதிகப்படியாக எலும்பு வளர்ந்து, அதைச் சுற்றிலும் சதை வீங்குதல் ஆகியவற்றால் குதிக்காலில் வலி ஏற்படலாம். வெறுங்காலுடன் மார்பிள், கிரானைட் போடப்பட்ட தரையில் நின்றால் வலி இன்னும் அதிகரிக்கும். ஐஸ்கட்டி மற்றும் சுடுநீரை மாற்றி மாற்றி வைத்து ஒத்தடம் கொடுத்தால் வலி சிறிது குறையும். மைக்ரோ செல்லுலார் ரப்பரால் ஆன காலணியை எப்போதும் அணிந்திருப்பது நல்லது. வெறுங்காலுடன் நிற்க வேண்டாம். கடுமையாக வலி ஏற்பட்டால் மருத்துவரின் ஆலோசனையைப் பெறவும். ■

பயனுள்ள குறிப்புகள்...

பெண்களின் உடல் அழகைக் காக்கும் பொருட்கள்

நம் சமையலறையில் பயன்படுத்தும் பொருட்களைப் பயன்படுத்தியே நமது அழகைப் பராமரிக்கலாம். செலவு குறைவாகவும், பக்க விளைவுகள் இல்லாமலும் இருக்கும் அழகுப் பொருட்கள் சிலவற்றை நாம் பார்க்கலாம்.

பேரீச்சம் பழம்

கொட்டை நீக்கிய பேரீச்சம் பழம், உலர்ந்த திராட்சைப் பழம் ஆகியவற்றை ஒரு நாள் முழுவதும் வென்னீரில் ஊற வைக்க வேண்டும். அதன் பிறகு அரைத்த இந்த கலவையுடன் அரை ஸ்பூன் பப்பாளி பழக்கூழை கலந்து கொள்ளவும். இந்தக் கலவையை முகத்தில் அழுத்தமாகப் பூசி 25 நிமிடம் கழித்து முகத்தை கழுவ வேண்டும்.

பாசிப் பருப்பு மாவு

முகத்தில் சிலருக்கு ஆங்காங்கே கருப்பு திட்டுகளும், கண்ணுக்குக் கீழே அடர்த்தியாக கருவளையமும் தோன்றும். இவைகளைப் போக்க பாசி பருப்பு மாவுடன் கசகசா, பாதாம், பிஸ்தா, துளசி, ரோஜா மொட்டு ஆகியவற்றை நன்கு காய வைத்து பவுடர் போன்று அரைத்து வைத்துக் கொள்ளவும். இந்தப் பவுடரை தினமும் பாலுடன் சேர்த்து குழைத்து முகத்தில் பூசி, 15 நிமிடங்களுக்குப் பிறகு கழுவி வந்தால் கருமை நீங்கும்.

கடலை மாவு

இரண்டு ஸ்பூன் கடலை மாவுடன், 4 ஸ்பூன் பால், 1 ஸ்பூன் ரோஸ் வாட்டர் சேர்த்து நன்கு கலக்கவும். பின்னர் இந்தக் கலவையை நன்றாக முகத்தில் பூசவும். பத்து நிமிடம் கழித்து குளிர்ந்த நீரில் முகத்தை கழுவினால் சருமம் மென்மையாகவும், இளமையாகவும் இருக்கும்.

பெண்களின் சரும அழகைப் பாதுகாப்பதில் மஞ்சள் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது.

மஞ்சள்

பெண்களின் அழகிற்கும் மஞ்சளுக்கும் முக்கிய பங்கு உள்ளது. ஒரு கிண்ணத்தில் 2 ஸ்பூன் கடலை மாவு எடுத்துக் கொண்டு, அதில் ஒரு சிட்டிகை மஞ்சள் சேர்த்து கலந்து சிறிதளவு தண்ணீர் கலந்து முகத்தில் பூசவும். அரைமணி நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரில் முகம் கழுவி வந்தால் சருமம் மென்மையாகும்.

தயிர்

எண்ணெய் வழிந்து பிசுபிசுப்பான முக சருமத்தைக் கொண்டவர்கள், தயிரில் கடலை மாவை கலந்து முகத்தில் பூசி வந்தால் முகம் பொலிவாக இருக்கும். கடலை மாவு, தயிர், எலுமிச்சம்பழச் சாறு ஆகியவற்றை ஒன்றாக சேர்த்து கலந்து, முகத்தில் பூசி 15 நிமிடங்கள் கழித்து தண்ணீரில் கழுவினால் முகத்தில் எண்ணெய் வடிவது நின்று முகம் பொலிவாகவும் பளபளப்புடனும் இருக்கும். ■

பலாப்பழம்

வைட்டமின் ஏ சத்து இந்தப் பழத்தில் அதிகம் உள்ளது. உடலுக்கும் மூளைக்கும் வலுவை அளிக்கும். தோலை மிருதுவாகவும், வழவழப்பாகவும் மாற்றும். தொற்றுக் கிருமிகளை அழிக்கும். இருப்பினும் இந்தப் பழத்தை அளவுக்கு அதிகம் சாப்பிட்டால் வயிறு மந்தமாகி வாந்தியும், வயிற்று வலியும் ஏற்படும். பெண்கள் மாத விடாய் காலங்களில் இந்தப் பழத்தை சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

சுண்டைக்காய்

சற்றுக் கசப்பாக இருக்கும் இந்தக் காயில் உயிர்ச் சத்துக்களுடன், இரும்பு மற்றும் புரதச் சத்துக்கள் ஏராளமாக உள்ளன. பெரும்பாலானோர் மோரும் உப்பும் சேர்த்து அதில் சுண்டைக்காயை ஊற வைத்து சாப்பிடுவார்கள். காய வைத்து வற்றலாகவும் பயன்படுத்தலாம். வயிற்றுப் போக்கைக் கட்டுப்படுத்தும் தன்மையும், உடல் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்களும் சுண்டைக்காயில் நிறைய உள்ளன. ■

இயற்கைப் பொருட்களால் கிடைக்கும் நன்மைகள்!

(சென்ற இதழ் தொடர்ச்சி) பகுதி – 5

பத்மா வெங்கடேசன்,
மேலாளர், இந்தியன் வங்கி

பெண்களின் முன்னேற்றத்திற்காக வங்கிகள்...

சென்ற நான்கு இதழ்களில் வங்கியில் கணக்கு துவங்குவது, சேமிப்பது மற்றும் முதலீடு செய்வது எப்படி என்று பார்த்தோம். நிறைய வாசகர்கள் நமது யோசனையைக் கேட்டு கணக்கு துவங்கி உள்ளதாக நமக்குத் தெரிவித்து உள்ளார்கள். இதன் மூலம் வங்கிக்கும், வாடிக்கையாளர்களுக்கும் இடையே நல்லதொரு பாலம் போல் நமது செயல்பாடு உள்ளதில் மிக்க மகிழ்ச்சி. இந்த இதழில் நகைக் கடன் பற்றி விரிவாகப் பார்ப்போமா?

நகைக் கடன் என்பது விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றால் அது மிகையாகாது. சாகுபடி சமயத்தில் ஏற்படும் திடீர் நெருக்கடிகளை சந்திக்க நகைக் கடன் அரசு தந்த கொடை என்றே சொல்லலாம். விவசாயத்தில் ஏற்படும் ஏற்ற தாழ்வுகளுக்கும் சமயத்தில் கை கொடுத்து உதவுவது நகைக் கடனே. சொத்து, அடமானம், பாத்திரம் போன்ற எந்த சிக்கலும் இல்லாமல் தங்க ஆபரணத்தை வைத்து கடன் வாங்குவது மிகவும் எளிது. தங்க நகை மற்றும் தங்கத்தினால் செய்த பொருட்கள் மீது வங்கி கிளையிலேயே கடன் பெறலாம்.

குறுகிய காலம் அல்லது நீண்ட காலக் கடனாக நகை கடன் பெறலாம். அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப தங்க நகைக் கடன் பல நிலைகளில் வழங்கப்படுகிறது. தங்கத்தின் விலைக்கேற்ப 70% அல்லது நடப்பு விலைக்கேற்ப, எது குறைவோ, அந்த தொகை கடனாக வழங்கப்படும்.

22/24 தங்க மாற்று தரத்திற்கான விலை நிர்ணயிக்கப்பட்டு அதற்கு ஏற்றார் போல தொகை வழங்கப்படும்.

பெற்ற கடனை பயிர் அறுவடை முடிந்து 2 மாதத்திற்குள் செலுத்த வேண்டும். கடனின் கால அவகாசம் ஒரு வருடம் வரை. நகைக் கடன் பெறுவதற்கு வாடிக்கையாளர் வங்கிக்கு நேரில் செல்ல வேண்டும். வங்கி மேலாளர் அல்லது நகைக்கடன் அதிகாரியை சந்தித்து F120 என்ற விண்ணப்பத்தை வாடிக்கையாளரே பூர்த்தி செய்ய வேண்டும். தங்கநகையின்தரம்மதிப்பீட்டாளரால்நிர்ணயிக்கப்பட்டவுடன் அவரது கணக்கிற்கு வரவு வைக்கப்படும். கடனை திருப்பிய செலுத்திய அன்றே அடையாள அட்டையை ஒப்படைத்து நகையைப் பெற்றுக் கொள்ளலாம். ■

மேலும் விபரங்களுக்கு இந்தியன் வங்கி,
கார்ப்பரேட் அலுவலகத்தை அணுகவும் போன்: 2813 4036

(தொடரும்)

இங்கிலீஷ்ல பேசலாம் ஈஸியா...

2000 ஆங்கில வார்த்தைகள் தெரிந்து கொள்வோம்

பகுதி - 14

அன்பார்ந்த வாசகர்களே, பல்வேறு பணிகளை செய்பவர்கள் எவ்வாறு ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றனர் என்பதை இம்மாதம் அறிந்து கொள்வோம் வாருங்கள்.

விமானி	Pilot-பைலட்
பல் மருத்துவர்	Dentist-டென்டிஸ்ட்
போலீஸ்காரர்	Constable-கான்ஸ்டபிள்
வேட்டைக்காரர்	Hunter-ஹண்ட்டர்
எழுத்தர்	Clerk-க்ளர்க்
மருத்துவர்	Doctor-டாக்டர்
பொது மருத்துவர்	Physician-ஃபிஸிஸியன்
நரம்பியல் மருத்துவர்	Neurologist-நீரோலாஜிஸ்ட்
தோல் மருத்துவர்	Dermatologist-டெர்மாட்டாலிஜிஸ்ட்
மனநல மருத்துவர்	Psychiatrist-சைக்யாடிரிஸ்ட்

பொறியாளர்	Engineer-என்ஜீனியர்
எழுத்தாளர்	Writer-ரைட்டர்
பதிப்பாசிரியர்	Author-ஆத்தர்
விமான பணிப்பெண்	Air Hostess-ஏர்ஹோஸ்டஸ்
கப்பல் மாலுமி	Ship Captain-ஷிப் கேப்டன்
வரவேற்பாளர்	Receptionist-ரிசப்ஷனிஸ்ட்
மேலாளர்	Manager- மேனேஜர்
அலுவலர்	Officer-ஆபீஸர்
நிர்வாகி	Administrator-அட்மினிஸ்ட்ரேட்டர்
கண்காணிப்பாளர்	Supervisor-சூப்பர்வைசர்

(தொடரும்)

நடப்புக் கணக்கு என்றால் என்ன?

கே. எம். திருநாவுக்கரசு,
முதுநிலை ஆலோசகர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சென்ற இதழ்களில் வங்கிக் கணக்கு துவங்க தேவைப்படும் ஆவணங்கள் மற்றும் சேமிப்புக் கணக்கு (Savings Bank Account) பற்றி அறிந்து கொண்டோம். இந்த இதழில் நடப்பு கணக்கு (Current Account), வைப்புத் தொகை (Fixed Deposit) ஆகியவற்றைப் பார்ப்போம்.

நடப்பு கணக்கு (Current Account)

தனி நபர், சிறு குறு மற்றும் பெரிய அளவில் வியாபார நோக்குடன் செயல்படுபவர்களுக்கான கணக்கு; ஒரே நாளில் பலமுறை அதிக பணம் பரிமாற்றம் செய்ய உதவும் கணக்கு; இது காசோலைகள் மூலம் மட்டும் இயக்கப்படும் கணக்கு; இந்த கணக்கில் உள்ள தொகைக்கு வட்டி கிடையாது. குறைந்தபட்ச தொகை ரூ. 1000, 2000, 5000, 10000 என வங்கிக் கணக்கில் வைத்திருக்க வேண்டும்; ஒரு குறிப்பிட்ட தொகை – உதாரணமாக ரூ. 10 ஆயிரம் எப்போதும் கணக்கில் வைத்திருப்பவர்களுக்கு சில / பல சலுகைகள் வழங்கப்படும்.

உதாரணம் – காசோலைகளுக்கு கட்டணம் கிடையாது, வரைவு காசோலை (Demand Draft) கட்டண சலுகை, சிறப்பு காசோலைகள் (Multicity Cheques)

வைப்புத் தொகை (Fixed Deposit Account)

குறுங்காலம் மற்றும் நெடுங்காலத் தேவைகளுக்கு சேமித்து வைக்கும் திட்டம், சேமிப்பு கணக்கு காட்டிலும் கூடுதலான வட்டி கிடைக்கும், ஒரு குறிப்பிட்ட தொகையை, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தவணை முறையில் சேமிக்கும் திட்டம் உதாரணம் – ரூ. 1000/– மாதந்தோறும் 6 மாதம் (அ) 12 மாதங்களுக்கு சேமித்து வைக்கலாம். (Recuring Deposit Account) ஒரு குறிப்பிட்ட தொகையை 7 நாட்கள் முதல் 120 மாதங்கள் (10 வருடங்கள் வரை) இத்திட்டத்தில் முதலீடு செய்ய முடியும்.

தனி நபர், சிறு குறு மற்றும் பெரிய அளவில் வியாபார நோக்குடன் செயல்படுபவர்களுக்கான கணக்காக நடப்புக் கணக்கு இருக்கிறது.

உதாரணம்

கால அளவு	வட்டி விகிதம் (ஓர் ஆண்டிற்கு)
7 நாட்கள்	
90 நாட்கள்	
91 நாட்கள் - 6 மாதங்கள்	
6 மாதங்கள் - 12 மாதங்கள்	
1 வருடம் முதல் - 3 வருடங்கள்	
3 வருடங்கள் - 5 வருடங்கள்	
5 வருடங்களுக்கு மேல் 10 வருடங்கள் வரை	

மூத்த குடிமக்களுக்கு (Senior Citizen) 0.50% முதல் 1% வரை கூடுதல் வட்டி கிடைக்கும். கூட்டு வட்டியுடன் சேமித்து கால முடிவில் அசலும் வட்டியும் சேர்த்துக் கிடைக்கும் வசதி அல்லது மாதம் ஒருமுறை (அ) 3 மாதங்களுக்கு ஒருமுறை வட்டி வாங்கிக் கொள்ளும் முறை என்று தனிநபர் தேவைக்கேற்ற வசதி உள்ளது. சிறுவர்கள் பெயரிலும் இத்திட்டத்தில் சேமிக்கலாம்.

முக்கிய வசதி / சலுகைகள்

வட்டி உயரும் பொழுது, அந்த பயனை அடையும் வசதி – உதாரணம் – தொகை ரூ. 1,00,000/–, தேதி – 01.03.2013 கால அளவு 3 வருடங்கள், வட்டி விகிதம் – 8% வட்டி விகிதம் மாற்றம் – தேதி 01.03.2014 காலம் 3 வருடங்கள் – வட்டி 9.50% வாடிக்கையாளர், வட்டி உயர்வின் பயனை அடைய வங்கியை எழுத்து மூலம் அணுகி, ஏற்கனவே உள்ள வைப்புத் தொகையை அன்றைய தேதி வரை முடித்துக் கொண்டு, புதியதாக 3 வருடங்களுக்கு (அதாவது ஏற்கனவே விடப்பட்ட 2 வருடங்களுக்கு மேல் இருத்தல் அவசியம்) புதுப்பிக்க விண்ணப்பம் செலுத்தினால், வங்கி கீழ்கண்டவாறு உதவி செய்யும்.

01.03.2013 முதல் 10.03.2014 (விண்ணப்ப தேதி), இடைப்பட்ட காலம், ஒரு வருடம் 9 நாட்களுக்கு, வைப்பு தொகை செலுத்திய தேதியில் (01.03.2013) எவ்வளவு வட்டி விகிதமோ, அந்த வட்டியை (உதா – 7%) கணக்கிட்டு, எந்தவித அபராதமுமின்றி கொடுப்பார்கள். 10.03.2014 முதல் 3 ஆண்டுகளுக்கு 9.50% வட்டி விகிதத்தில் புதிய வைப்புத் தொகை பத்திரம் வழங்கப்படும். ■

நம் மாவட்டம்

பெரம்பலூர்

மகளிருக்கு ஓட்டுநர் பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் பெரம்பலூர் மாவட்டத்தில் 2013–14ஆம் ஆண்டிற்கான இளைஞர் திறன் வளர்த்தல் பயிற்சி நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பிரிவாக ஓட்டுநர் பயிற்சிக்கு 10 பெண்கள் தேர்வு செய்யப்பட்டு, தற்போது 7 பெண்கள் ஆர்வத்துடன் பெரம்பலூர் நவீன் ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சிக்குப் பின்னர் தாட்கோ மூலம் கடன் பெற்று வாகனம் வாங்கி ஓட்டுவதற்கும், பிற நிறுவனங்களில் ஓட்டுநராகப் பணி புரியவும் விருப்பம் தெரிவித்துள்ளனர். ■

திருச்சிராப்பள்ளி

கல்லூரிச் சந்தை

திருச்சிராப்பள்ளி மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் சார்பில், சுய உதவிக்குழு மகளிர் தயாரித்த பொருட்களை கல்லூரி மாணவர்களிடையே பிரபலப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், திருச்சி ஹோலிகிராஸ் கல்லூரியில் 'கல்லூரிச் சந்தை' நடைபெற்றது. இந்தக் கல்லூரி சந்தையில் திருச்சி மாவட்டத்தில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தனர். கல்லூரி பேராசிரியர்கள், மாணவியர் பெருமளவில் கலந்து கொண்டு சுய உதவிக் குழு மகளிர் தயாரித்த பொருட்களை ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர். ■



சென்னை

கருத்துப் பட்டறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பாக சமூக மாற்றுத் திறனாளிகள் ஒருங்கிணைப்பாளர் கையேட்டினை உருவாக்குவதற்கான கருத்துப் பட்டறை 08.05.2014 முதல் 10.05.2014 வரை சென்னை ஆஷா நிவாஸ் சமூக நல மையத்தில் நடைபெற்றது. இந்தப் பயிற்சிப் பட்டறையை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் துவக்கி வைத்தார். ஜாஸ்மின், DAWO, சென்னை, தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மாற்றுத்திறனாளி ஒருங்கிணைப்பாளர்கள், திருவண்ணாமலை, விழுப்புரம், பெரம்பலூர், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க உதவித் திட்ட அலுவலர்கள் இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாற்றுத் திறனாளிகள் ஆலோசகர் திருமதி. வி. தீபா ராஜ்கமல் மேற்பார்வையில் மூன்று நாட்கள் நடைபெற்ற இப்பயிற்சிப் பட்டறையில் CDF (Community Disability Facilitator) கையேடு தயார் செய்யப்பட்டது. ■

விழுப்புரம்

வெளிநாட்டினரின் பாராட்டு

விழுப்புரம் மாவட்டத்தில் மத்திய மாநில அரசுகளின் உதவியுடன் செயல்படுத்தும் திட்டங்களை பார்வையிட ஐதராபாத்தில் உள்ள தேசிய ஊரக வளர்ச்சி பயிற்சி மையத்தின் அலுவலர் திரு. ரஜினி அவர்களின் தலைமையில் சீனா, தென் ஆப்பிரிக்கா, ஜப்பான், ரஷ்யா, ஐரோப்பா உட்பட 16 நாடுகளின் பிரதிநிதிகள் வருகை தந்தனர். இக்குழுவினர், விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பிரம்மதேசம் மற்றும் கந்தாடு ஆகிய ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை பார்வையிட்டு, அக்கூட்டமைப்பிலுள்ள மகளிர் குழுக்களின் செயல்பாடுகளையும் அவர்கள் செய்யும் சிறுதொழில்களையும் பார்த்து வெகுவாகப் பாராட்டினர். ■

சென்னை

புத்தறிவு பயிற்சி

தமிழ்நாடு புதுவாழ்வு திட்டத்திலிருந்து பணி மாறுதலில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள அனைத்து மாவட்ட உதவித் திட்ட அலுவலர்களுக்கும் 06.05.2014 மற்றும் 07.05.2014 ஆகிய இரண்டு நாட்கள் புத்தறிவு பயிற்சி, சென்னை அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் இதன் செயல்பாடுகள் குறித்து கூடுதல் இயக்குநர்கள் முனைவர் ம. மனோகர சிங், திருமதி. எம். மாதவி, திரு. எல். ராஜா மற்றும் மாநில அலுவலர்கள் விளக்கிக் கூறினர். ■

இந்த இரண்டு நாள் பயிற்சி தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்ததாகவும், வாழ்வாதார இயக்கம் குறித்த பல்வேறு விபரங்களை அறிந்து கொள்ள உதவியாக இருந்ததாகவும் உதவித் திட்ட அலுவலர்கள் தெரிவித்தனர்.

தேனி

கலந்தாய்வுக் கூட்டம்

தேனி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க களப்பகுதி வழி நடத்துனர்களுக்கு மாவட்ட அளவில் இயக்கத்தின் செயல்பாடு குறித்து ஆய்வுக் கூட்டம் மாதந் தோறும் திட்ட இயக்குநர் அவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த 15.04.2014 அன்று மாவட்ட இயக்க மேலாண்மை அலகு அலுவலகத்தில் திட்ட இயக்குநர் திருமதி. ஜா. உஷாதேவி அவர்கள், இந்த ஆய்வுக் கூட்டம் நடத்தினார்கள். இக்கூட்டத்தில் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் செயல்பாடுகள், பயிற்சி திட்டம், பதிவேடுகள் பராமரிப்பு முறை மற்றும் ஒத்த தொழில் குழுவின் செயல்பாடுகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் உதவித் திட்ட அலுவலர்கள், பெரியகுளம், உத்தமபாளையம், சின்னமனூர் மற்றும் கம்பம் வட்டார களப்பகுதி வழி நடத்துனர்கள் கலந்து கொண்டனர். ■

கரூர்

இயக்கம் தந்த வாழ்வு

கரூர் மாவட்டம், நெரூர் (தெற்கு) ஊராட்சியை சேர்ந்தவர் அகிலா. இவர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் நடைபெற்ற இளைஞர் தொழிற்திறன் பயிற்சி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டு, யோகமித்ரா பயிற்சி நிறுவனத்தில் தையல் பயிற்சி பெற்றார். பயிற்சிக்குப் பின்னர் தற்போது கரூரில் உள்ள ஏற்றுமதி நிறுவனத்திற்கு துண்டுகள் தைத்து தருவதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ. 5000/– வரை வருவாய் பெற்று வருகிறார். தனக்கு இந்த வாய்ப்பை தந்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறார் அகிலா. ■

வேலூர்

மக்கள் அமைப்புகளின் செயல்பாடுகள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் இயக்குநர், புதுவாழ்வு திட்ட மாநில வல்லுநர் (MIS) மற்றும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்க (MIS) அணியினர், 08.05.2014 அன்று வேலூர், மேல்குப்பம் மற்றும் வடப்புதுப்பட்டு ஊராட்சிகளில், புதுவாழ்வு திட்டத்தின் வழிகாட்டுதலின்படி செயல்படும் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் ஒத்த தொழில் கூட்டமைப்பு போன்ற மக்கள் அமைப்புகளை பார்வையிட்டு ஒவ்வொரு மக்கள் அமைப்புகளில் உள்ள தகவல்களை தனித்தனியே பார்வையிட்டு அதை கணினியில் (Tally Software) பதிவு செய்யும் முறைகளை மக்கள் அமைப்பு பிரதிநிதிகளான சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், செயலாளர், பொருளாளர் மற்றும் கணக்காளர்களை விளக்க செயல்முறையில் கேட்டறிந்தார்கள். ■

இளைஞர் திறன் மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சிகள்

இளைஞர்கள் ஒரு நாட்டின் முக்கிய தூண்களாகவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முதுகெலும்பாகவும் உள்ளனர். இவ்வயதினரிடம் எண்ணற்ற ஆற்றல்கள் புதைந்துள்ளது. அவற்றை முறைப்படுத்தி தனிநபரது வளர்ச்சி, குடும்ப, சமூக மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் உகந்தவர்களாக அவர்களை உருவாக்குவதில் கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க பணியாளர்கள் என அனைவரின் பங்கும் உள்ளது.

வறுமை கொடியது, அதனினும் ‘இளமையில் வறுமை மிகக் கொடியது’ என்றார் அவ்வையார். குறிப்பாக ஊரக பகுதியான கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்கள், இளம் பெண்கள் அவர்களது திறன்களை செம்மைப்படுத்தாததால் நல்ல வேலைவாய்ப்புகள் இன்றியும், கிடைத்த வேலையை குறைந்த ஊதியத்தில் செய்தும் வருகின்றனர்.

அவர்களின் திறன்கள், விரும்புகின்ற மற்றும் முன்னேற துடிக்கின்ற துறைகள், தொழில்களை அறிந்து, அவர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சிகள் தந்தும், ஆற்றல்படுத்தியும், நுண்திறன், வாழ்க்கைத் திறன் ஆகியவற்றை அறியச் செய்து, நேர்மறை எண்ணங்கள் உடையவர்களாகவும், சக்தி மிக்கவர்களாகவும் இச்சமுதாயத்தில் முழு மனிதர்களாக உருவாக்கிட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் பல்வேறு தொழில்களில் பயிற்சிகள் தந்து, வேலைவாய்ப்புகள் பெற்றுத் தருவதுடன், சுய தொழில்கள் துவங்கிடவும் வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படுகிறது.

எனவே தொழில் பயிற்சி குறித்த மேலும் விபரங்களுக்கு, உங்கள் ஊராட்சியில் உள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கம், பகுதி ஒருங்கிணைப்பாளர்கள், அனைத்து மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க மேலாண்மை அலகு ஆகியவற்றை தொடர்பு கொள்ளவும். ■

ஒய். ஜான்சன்
உதவித் திட்ட அலுவலர்
திருவண்ணாமலை

கால்நடை நலம்...!

கோமாரி நோய்...!

இந்நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளின் கால்களிலும், வாயிலும் கொப்புளங்கள் உண்டாவதால், இந்நோயை கால் வாய் கோமாரி நோய் என்றும் கூறுவர். இந்நோய் மாடு, ஆடு, பன்றி போன்ற பிளவுபட்ட கால் குளம்புகளை உடைய பிராணிகளை தாக்கும்.

அறிகுறிகள்

கடுமையான காய்ச்சல் இருக்கும். தீவனம் உட்கொள்ள முடியாது. அசை போட முடியாது. பால் உற்பத்தி குறையும். கால் குளம்பின் நடுப்பகுதியிலும், வாயின் உட்பகுதி, நாக்கு மற்றும் பால் மடிகளிலும் கொப்புளங்கள் தோன்றி உடைந்து ரணமாகும். சினை மாடாக இருந்தால் கரு சிதைவு ஏற்படும். பாதிக்கப்பட்ட பசுக்களின் பாலினை குடிக்கும் கன்றுகள் உடனடியாக இறந்து விடும்.

தடுப்பு முறைகள்

தடுப்பூசி போடுவதுதான் சிறந்தது. வருடத்திற்கு இருமுறை தடுப்பூசி போட வேண்டும். அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தில் இலவசமாக இத்தடுப்பூசி போடப்படுகிறது.

டாக்டர். P. துரைராசன்,
கால்நடை மருத்துவர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பாட்டி வைத்தியம்

கட்டிக் கற்பூரத்தை வேப்ப எண்ணெயில் குழைத்து புண்களில் தடவினால், புண்களில் புழு வைப்பது தடுக்கப்பட்டு புண்ணும் விரைவில் குணமாகும்.



நமது உணவில் 'புரதச் சத்து' இன்றியமையாதது. அரிசி உற்பத்தியில் நாம் தன்னிறைவு பெற்றுள்ள போதிலும், புரதச் சத்தை வழங்குகின்ற பயறு உற்பத்தியில் நாம் பிற மாநிலங் களையும், இறக்குமதியையுமே சார்ந்துள்ளோம். துவரை, பாசிப்பயிறு, உளுந்து ஆகிய பயறு வகைப் பயிர்களின் உற்பத்தி மிகவும் சரிவு நிலையை எட்டியுள்ளது.

எனவே தமிழ்நாடு அரசு பயறு வகைகளின் உற்பத்தித் திறனை உயர்த்தும் பொருட்டும். அதிக பரப்பில் சாகுபடி செய்து, உற்பத்தியைப் பெருக்குவதற்கும் சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

பயறு வகைப் பயிர்களின் இன்றியமையாமை!

த.வ.க. ஜமால்
வேளாண்மை ஆலோசகர், (வேளாண்மை)
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பயறு வகைப் பயிர்களுக்கான இயக்கம்

அ)	நடவு முறை மூலம் துவரை சாகுபடி செயல் விளக்கங்கள் அமைத்தல்	50 சதவீத மானியம் எக்டேருக்கு ரூ. 7500/-
ஆ)	நடவு முறை மூலம் துவரை சாகுபடி செய்ய ஊக்கத் தொகை வழங்குதல்	50 சதவீத மானியம் எக்டேருக்கு ரூ. 7500/-
இ)	பாசன நீர் எடுத்துச் செல்லும் குழாய்கள் நிறுவுதல்	50 சதவீத மானியம் அல்லது ரூ. 8250/-
ஈ)	மழைத் தூவுவான்கள் விநியோகம் மற்றும் நிறுவுதல்	50 சதவீத மானியம் அல்லது ரூ. 15,000/- வரை
உ)	தார்ப்பாய் விநியோகம்	50 சதவீத மானியம் அல்லது ரூ. 4,000/- வரை
ஊ)	நன்செய் தரிசில் பயிர் எண்ணிக்கை பராமரித்தல்	ஆதி திராவிட பழங்குடி மக்கள் விவசாய குழுக்களுக்கு 'டர்போ ஹாப்பி' விதைப்பான் குழு ஒன்றுக்கு 100 சதவீத மானியம் ரூ. 1,25,000/-

தேசீய உணவுப் பாதுகாப்புத் திட்டம் – பயறு

அ)	சான்று விதை விநியோகம் 10 வருடங்களுக்குள் வெளியிடப்பட்ட இரகங்களுக்கு வெளியிடப்பட்டு 10 வருடங்களுக்கு மேல் ஆன இரகங்களுக்கு	குவிண்டாலுக்கு ரூ. 2200/- மானியம் குவிண்டாலுக்கு ரூ. 1200/- மானியம்
ஆ)	தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் விநியோகம்	50 சதவீத மானியம் அல்லது எக்டேருக்கு ரூ. 7500/-
இ)	ரைஸோபியம் / பாஸ்போ பேக்டீரியா விநியோகம்	50 சதவீத மானியம் அல்லது எக்டோருக்கு ரூ. 100/-
ஈ)	பம்புசெட் ஒன்றுக்கு	50 சதவீத மானியம் அல்லது ரூ. 10,000/-
உ)	என். பி. வி. (நச்சுயிரி) விநியோகம்	எக்டேருக்கு ரூ. 250/-
ஊ)	தெளிப்பான்கள் விநியோகம்	50 சதவீத மானியம் அல்லது ரூ. 3,000/-
எ)	குழாய் மூலம் நீர் ஆதாரங்களிலிருந்து வயல்வெளிக்கு நீர் எடுத்துச் செல்லுதல்	50 சதவீத மானியம் அல்லது எக்டேருக்கு ரூ. 15,000/-
ஏ)	உழவர் வயல்வெளிப்பள்ளி பயிற்சி	பயிற்சி ஒன்றுக்கு ரூ. 14,000/-
ஐ)	நீர்த் தெளிப்பான்கள்	எக்டேருக்கு ரூ. 7,500/-
ஒ)	மழைத் தூவுவான்கள் / சிறிய வகை நீர்த் தெளிப்பான்கள்	எக்டேருக்கு ரூ. 15,000/- மானியம்
ஓ)	சுழற் கலப்பை (Rotovar) ஒன்றுக்கு	50 சத மானியம் அல்லது ரூ. 30,000/-
ஔ)	பயிர் சாகுபடி முறைப் பற்றிய பயிற்சி	பயிற்சி ஒன்றுக்கு ரூ. 14,000/-

(தொடரும்)

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் /
திட்ட இயக்குநர்

திரு. A. R. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ்,
கூடுதல் இயக்குநர்

திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

சமையலறை கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரிக்கும் திட்டம்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திராவில் செயற்படுத்தப்படும் NARDEP தொழில் நுட்ப உதவியுடன் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் வீட்டு சமையலறை கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரிக்கும் திட்டம் ஏழை மற்றும் மிகவும் ஏழை மக்களுக்கு தலா ரூ. 19,000/– மதிப்பீட்டில் அமைத்துக் கொடுக்க திட்டமிடப் பட்டு, முதல் கட்டமாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் 15 பயனாளிகளுக்கு பரீட்சார்த்த முறையில் இக்கலன்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. சமையலறைக் கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரிக்கும் கலன் குறித்து இராஜக்காமங்கலம் அளத்தங்கரையில் வசிக்கும் திருமதி. ஜெயம் கூறும்போது, ‘நான் ரூ. 1900/– மட்டும் செலுத்தி இந்த சமையலறை கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரிக்கும் கலனை என் வீட்டில் பொருத்தி, என் வீட்டு சமையலறைக் கழிவுகளைப் பயன்படுத்தி அதன் மூலம் கிடைக்கும் எரிவாயுவைப் பயன்படுத்தி சமையல் செய்து வருகிறேன். எரிவாயுவிற்கான செலவு ஒரு வருடத்திற்கு சுமார் ரூ. 300/– முதல் ரூ. 500/– வரை மிச்சமாகிறது. குறைந்த செலவில் எரிவாயு தயாரித்து எளிதாக சமையல் செய்யவும் முடிகிறது’ என்கிறார். ■

பயனாளிகள் 10 சதவீதம் மட்டும் தமது பங்குத் தொகையாக செலுத்த வேண்டும். மீதமுள்ள 90 சதவீதத் தொகையில் 60 சதவீதத் தொகையை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு 25 தவணைகளாக செலுத்த வேண்டும்.

மருத்துவக் காப்பீட்டினால் கிடைத்த மறுவாழ்வு

நான் மருத்துவ காப்பீடு திட்டத்தில் இணையாமல் இருந்திருந்தால் கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்தி வரும் என்னால் இவ்வளவு தொகையும் செலுத்த முடியாமல் சிகிச்சை பெற்றிருக்க முடியாது.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மருத்துவக் காப்பீடு திட்டத்தின் மூலம் மறுவாழ்வு பெற்ற முத்து கூறும் போது. 'நான் குடும்பத்துடன் கடலூர் மாவட்டம் பச்சையாங்குப்பத்தில் வசித்து வருகிறேன். என்னுடைய மனைவி தனலட்சுமி, தாமரை மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளார். சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் அளிக்கப்பட்ட காப்பீடு தொடர்பான பயிற்சியின் பயனாக 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் காப்பீட்டு கட்டணம் ரூ.150/–ஐ கூட்டமைப்பில் செலுத்தி மருத்துவ காப்பீட்டில் இணைந்தேன். ஆறு மாதங்களுக்கு முன்பு திடீரென எனக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டது. மருத்துவ பரிசோதனையில் எனது இரைப்பையில் பிரச்சனை என தெரிய வந்தது. மருத்துவ காப்பீடு திட்ட நெறிகளின்படி, கூட்டமைப்பின் பரிந்துரையுடன் கடலூரில் உள்ள கண்ணன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்து, தற்போது நலமுடன் இருக்கிறேன்.

சிகிச்சைக்கான செலவு ரூ. 9736/–ஐ கூட்டமைப்பு மூலமாக யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் மருத்துவமனைக்கு செலுத்தியது. ஒருவேளை நான் மருத்துவ காப்பீடு திட்டத்தில் இணையாமல் இருந்திருந்தால் கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்தி வரும் என்னால் இவ்வளவு தொகையும் செலுத்த முடியாமல் சிகிச்சை பெற்றிருக்க முடியாது. என் உயிரை காப்பாற்றிய ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மற்றும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் ஆகியவற்றிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.' ■

மாநில அளவில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் ஆளுமை மற்றும் நிதி மேலாண்மை குறித்த பயிற்சி

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் உள்ள மாவட்ட செயலாக்க அலுவலர்கள் மற்றும் 28 வள ஆதார மையங்களை சேர்ந்த பணியாளர்களுக்கு கூட்டமைப்பு ஆளுமை பயிற்சி மற்றும் கூட்டமைப்பு நிதி மேலாண்மை குறித்த பயிற்சிகள் கடந்த 24.03.2014 முதல் 03.04.2014 வரை விழுப்புரம் கல்வி கேந்திரா அரசு சாரா தொண்டு நிறுவன பயிற்சிக் கூடத்தில் நடைபெற்றது. முதல் கட்டமாக நடத்தப்பட்ட ஆளுமை பயிற்சியில் திட்ட பகுதியைச் சேர்ந்த ஆறு மாவட்டங்களின் சமுதாய வளர்ச்சி அலுவலர்கள், வள ஆதார மையத்தைச் சார்ந்த வழி நடத்துனர்கள் கலந்து கொண்டனர். இரண்டாம் கட்டமாக மாவட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு அலுவலர்கள் மற்றும் கூட்டு வள ஆதார மைய ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர். மூன்றாம் கட்டமாக மாவட்ட செயலாக்க அலுவலர்கள், நிறுவன வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் வள ஆதார மைய வணிக ஊக்குவிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

பயிற்சியில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சட்டபூர்வமான கடமைகள், பதிவு புதுப்பித்தல், தணிக்கை ஆண்டு நிதி நிலை அறிக்கை, கடன் திட்டம், காப்பீடு திட்டம் ஆகியவை பற்றி தெளிவாக விளக்கப்பட்டது.

பயிற்சியில் மகளிர் சுய உதவிக் குழு மேலாண்மை, குடியிருப்பு மன்றம் அமைத்தல், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அமைத்தல், செயற்குழு உறுப்பினர்கள் தேர்வு, நிர்வாகிகள் தேர்வு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் குடியிருப்பு மன்ற கூட்டம் நடத்துவது பற்றி தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் செயல்படுத்திவரும் அனைத்து திட்டங்களையும் செயல்படுத்தும் முறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இறுதி நாள் பயிற்சியில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சட்டப்பூர்வமான கடமைகள், பதிவு புதுப்பித்தல், தணிக்கை, ஆண்டு நிதி நிலை அறிக்கை, கடன் திட்டம், காப்பீட்டுத் திட்டம் ஆகியவை பற்றி தெளிவாக விளக்கப்பட்டது. இறுதியில் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி குறித்து மதிப்பீடு செய்யப்பட்டு முதல் மூன்று இடம் பெற்ற பயிற்சியாளர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. ■

மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக சில நடவடிக்கைகள்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தில் கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இனையம் ஊராட்சி இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளது. ரூ. 24 இலட்சம் மதிப்பீட்டில் படகு இயந்திரம் (OBM) பழுது நீக்கும் பிரிவு, படகு கட்டும் தளம் மற்றும் அலுவலகம், OBM என்ஜின் பழுது நீக்கம் செய்வதற்கு தேவையான உதிரி பாகங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க இந்த வசதிகள் உதவும்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்கு கடற்கரை பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் இப்படகுத் துறை மூலம் சிறிய மீன்பிடி தொழிலாளர்கள் பெருமளவில் பயன் பெறுவர். படகு என்ஜின்கள் பழுது நீக்கம் செய்வதில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கும் விதத்தில் பயிற்சிகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இப்பகுதியில் ரூபாய் 23.00 இலட்சத்தில் மீன் விற்பனைக் கூடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் மேற்கூறிய திட்டங்களால் இணையம் பகுதியில் உள்ள சிறு படகுகள் மூலம் தொழில் செய்யும் மீனவர்களின் வாழ்க்கை விரைவாக முன்னேறும் என்பதில் ஐயமில்லை.

இப்படகுத் துறை மூலம் சிறிய மீன்பிடி தொழிலாளர்கள் பெருமளவில் பயன் பெறுவர். படகு என்ஜின்கள் பழுது நீக்கம் செய்வதில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கும் விதத்தில் பயிற்சிகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

குறுந்தொழில் மேம்பாட்டு பயிற்சி பட்டறை

பயிற்சியின் இறுதி நாளில் பயிற்சியாளர்களின் புரிதல் திறன் அறிந்து கொள்ள தேர்வுகளும் நடத்தப்பட்டன. இப்பயிற்சிகள் தங்களுக்கு மிகவும் நிறைவளித்தாகவும், குறுந்தொழில்கள் குறித்த அறிவை மேம்படுத்தி உள்ளதாகவும் பயிற்சியாளர்கள் தெரிவித்தனர்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே செயல்பட்டு வரும் குறுந்தொழில்கள் மற்றும் இவ்வருடம் செயல்படுத்தப்பட்டுள்ள விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு தொடர்பான தொழில்நுட்ப அணுகுமுறைகள், இத்தொழில்களுக்கான நிதி பராமரிப்பு மற்றும் நிறுவன மேலாண்மை குறித்த 6 திட்ட மாவட்டங்களில் பணிபுரியும் நிறுவன வளர்ச்சி

அலுவலர்கள், கூட்டு வள மைய ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் வியாபார ஊக்குநர்கள் ஆகியோருக்கு காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலைநகரில் உள்ள மாநில ஊரக வளர்ச்சி (SIRD) பயிற்சி நிலையத்தில் 28.04.2014 முதல் 30.04.2014 வரை 3 நாட்கள் செய்முறைப் பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சியினை கூடுதல் இயக்குநர் திரு. ஏ. ஆர். கிளாட்ஸ்டன் புஷ்பராஜ் அவர்கள் துவக்கவுரையாற்றியபின், தோட்டக்கலை உதவி இயக்குநர் திரு. ஆர். வெங்கடேசன் அவர்கள் காய்கறி சாகுபடி குறித்தும், குறுந்தொழில் விவசாய ஆலோசகர் திரு. பி. ஆர். வைத்தியநாதன் அவர்கள் இயற்கை வேளாண்மை குறித்தும், முனைவர் மணிகண்டவேலு அவர்கள் நண்டு, இறால் வளர்ப்பு மற்றும் மீன் பதப்படுத்துதல், சந்தைப்படுத்துதல் குறித்தும் பயிற்சி அளித்தனர்.

குறுந்தொழில் ஆலோசகர் மற்றும் கால்நடை மருத்துவர் திரு. என். பிரேம்நாத் அவர்கள் கால்நடை வளர்ப்பு, பராமரிப்பு பற்றிய பயிற்சியும், திரு. என். வி. சௌந்தரராஜன், முதுநிலை ஊரக நிதி மேலாளர் திரு. ஆர். லஷ்மி நாராயணன் ஆகியோர் முறையே சேவை தொழில், குறுந்தொழில் வரவு – செலவு விபரங்கள், கணக்கு புத்தகங்கள் பராமரிப்பு குறித்தும் பயிற்சி அளித்தனர்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் குறுந்தொழில்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரண்டாம் நாள் நிறுவன வளர்ச்சி மேலாளர் திரு. சி. கனிங்ஸ்டன் அவர்கள், விழுப்புரம் மாவட்டம், ஆலப்பாக்கம் கிராமத்தில் செயல்பட்டு வரும் கோழி வளர்ப்பு, ஹாலோபிளாக் மற்றும் காய்கறி சாகுபடி போன்றவற்றின் செயல்பாடுகளை நேரில் பயிற்சியாளர்களுக்கு விளக்கிக் கூறி பயிற்சியளித்தார்.

இப்பயிற்சியின் கடைசி நாள் பயிற்சியாளர்களுக்க திறன் அடிப்படை பயிற்சிகளும் வழங்கப்பட்டது. பயிற்சியாளர்களின் புரிதல் திறன் அறிந்து கொள்ள தேர்வுகளும் நடத்தப்பட்டன. பயிற்சி தமக்கு மிகவும் நிறைவளித்ததாகவும், குறுந்தொழில்கள் குறித்த அறிவை மேம்படுத்தி உள்ளதாகவும் பயிற்சியாளர்கள் தெரிவித்தனர். ■

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கணினியும் அதற்கான பயிற்சியும்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டப் பகுதியில் உள்ள அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளைச் சேர்ந்தவர்களுக்கு கணினி பயன்படுத்தவும், அதன் மூலம் கூட்டமைப்புகளின் கணக்கு மற்றும் இதர நிர்வாக செயல்பாடுகளை இலகுவாக தமிழிலேயே பராமரித்திடவும் M/S Tally நிறுவனம் மூலம் ஒரு மென்பொருள் (ERP 9) தயாரிக்கப்பட்டுள்ளது.

சுனாமிக்குப் பிந்தைய திட்ட பகுதிகளிலுள்ள 109 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் கணினி, பிரிண்டர், மின் சேமிப்பு கருவி (UPS) மற்றும் பிற தளவாடப் பொருட்கள் வழங்கப்பட்டு, கணினிகளில் Tally ERP 9 மென்பொருள் பதிவேற்றப்பட்டுள்ளது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் கணக்குப் பராமரிப்பாளர்களுக்கு (Book Keepers) கணினி பயன்பாடு மற்றும் Tally மென்பொருள் தொடர்புடைய பயிற்சிகள் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம் மாவட்டங்களில் வழங்கப்பட்டு வருகிறது.

பயிற்சி பெற்ற அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் கணக்கு பராமரிப்பாளர்களும் தங்கள் கூட்டமைப்புகளில் உறுப்பினர்களாக உள்ள சுய உதவிக் குழுக்களின் கணக்குகளை தங்களின் கணினியில் பதிவு செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். இத்திட்டம் வெற்றியடையும் பட்சத்தில், முழு அளவில் கணினி மயமாக்கப்பட்ட கூட்டமைப்புகளாகவும், கணினி மூலம் அனைத்து செயல்பாடுகளையும் பதிவு செய்கின்றவர்களாகவும் இவர்கள் இருப்பர்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளைச் சேர்ந்தவர்களுக்கு கணினி பயன்படுத்த பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

முற்றக் கச்சேரி

இளைஞர் அமைப்பு

கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மூலம் அமைக்கப்படும் இளைஞர் அமைப்பு, சமூக வல்லுநர் ஆகியவை குறித்து சுய உதவிக் குழுவினைச் சேர்ந்த சுபா, செல்லாயி, பார்வதி மற்றும் வாணி ஆகியோர் விவாதிக்கின்றனர்.

சுபா: வணக்கம். எல்லோரும் வந்தாச்சா?

வேணி: எல்லாரும் வந்தாச்சி. நாம எதைப்பத்தி பேசப் போகிறோம்?

சுபா: இளைஞர் அமைப்பு குறித்து பேசலாம்.

செல்லாயி: இளைஞர் அமைப்புன்னா என்ன?

சுபா: கிராமங்கள்ல வறுமை ஒழிப்பு சங்கம் உருவாக்கிய பிறகு, அவ்வூராட்சியில் உள்ள அனைத்து இளைஞர்களையும் கொண்டு உருவாக்கப்படும் அமைப்பிற்கு ‘இளைஞர் அமைப்பு’ என்று பெயர்.

செல்லாயி: இந்த அமைப்புல யாரெல்லாம் உறுப்பினராக இருப்பாங்க?

சுபா: ஒரு ஊராட்சியில் 18 வயது முதல் 35 வயது வரை உள்ள ஆண் பெண் இருபாலரும் இளைஞர் அமைப்புல உறுப்பினராக சேரலாம். இந்த இளைஞர்களை ஒன்னா சேர்த்து 10 முதல் 15 பேர் கொண்ட இளைஞர் துணைக்குழுவை அமைக்கலாம். இதுல இருந்து சமூக வல்லுநர்களை தேர்வு செய்வாங்க.

செல்லாயி: துணைக்குழுவில் யாரெல்லாம் உறுப்பினராக இருப்பார்கள்?

சுபா: இதில் 50% ஏழை மக்களாகவும், 50% பெண்களாகவும் இருக்க வேண்டும். மாற்றுத் திறனாளி ஒருவரும், ஏழை குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பேரும் இந்தக் குழுவில் உறுப்பினராக இருப்பாங்க.

செல்லாயி: சமூக வல்லுநரை எப்படி தேர்வு செய்வாங்க?

சுபா: துணைக்குழுவில் இருந்தோ அல்லது ஏழை குடும்பத்தைச் சேர்ந்த ஆண் மற்றும் பெண் இருபிரிவில் இருந்தும் சமூக வல்லுநராக தேர்வு செய்வாங்க. இவர்கள் உள்ளூரில் வசிப்பவர்களாகவும், அனைவரிடமும் நன்கு பழகக் கூடியவராகவும் இருப்பது அவசியம். இவர்களைக் கொண்டு மேற்படிப்பு / தொழிற்பயிற்சி வழிகாட்டி மையம் துவக்க வேண்டும்.

பார்வதி: இந்த மையத்தை எப்படி அமைப்பது?

சுபா: ஊராட்சியில் உள்ள ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் அல்லது ஆசிரியர் தலைமையில் சமூக வல்லுநர்களைக் கொண்டு, மேற்படிப்பு / தொழிற்பயிற்சி வழிகாட்டி மையத்தை துவக்க வேண்டும்.

வாணி: சமூக வல்லுநரின் பொறுப்புகள் என்ன?

சுபா: ஊராட்சி அளவில் இளைஞர் புள்ளி விபரம் தயாரிப்பது, தொழிற்பயிற்சிகள் குறித்த விபரங்களை அறிந்து கொள்வது, நிறுவனங்கள் அளிக்கும் பயிற்சிகள், வேலைவாய்ப்புகள் குறித்த தகவல் களைத் திரட்டி, இளைஞர்களுக்கு தெரியப் படுத்துவது, துணைக் குழுவின் கூட்டத்தை கூட்டுவது, தீர்மானங்களை பதிவு செய்ய வழிகாட்டுவது, கூட்ட முடிவுகளை அனை வருக்கும் தெரியப்படுத்துவது, போன்றவை சமூக வல்லுநர்களின் பணிகளாகும். மாநில ஊரக வாழ்வாதார இயக்க ஒருங்கிணைப்பாளர்கள் இவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பார்கள்.

செல்லாயி: இளைஞர் குழு பற்றி விளக்க மாக சொன்னதற்கு ரொம்ப நன்றி.

சுபா: சரி, அடுத்த முறை வேற திட்டம் குறித்து பேசலாம்.

(சுபா விடைபெற்றுச் செல்ல, செல்லாயி, பார்வதி மற்றும் வாணி ஆகியோர் தங்களின் வீடுகளுக்குச் செல்கின்றனர்). ■

(தொடரும்)

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

புது வாழ்வு திட்டம்

தான் படிக்க வில்லை என்றாலும் தன் பிள்ளைகளை நல்ல முறையில் படிக்க வைத்துள்ள மல்லிகா, தனக்கு வளமான வாழ்வினை உருவாக்கித் தந்துள்ள புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்...

பக்கம்...28

மழை நீரை உடனே பயன்படுத்தும் வகையில் பாத்திரங்களிலோ அல்லது தொட்டிகளிலோ சேமிக்கலாம். மழை நீரை சேகரித்து முறையாக நிலத்தின் கீழ் செலுத்தி நிலத்தடி நீரை புத்துயிர்ப்பூட்டலாம்.

பக்கம்...30

நமது நாட்டில் இயற்கையாகவே ஆயிரத்திற்கும் மேற்பட்ட வண்ண மீன்கள் காணப்படுகின்றன. இவற்றினை வளர்ப்பது மிக எளிய முறையே ஆகும். கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தில் இந்த மீன் வளர்ப்பு பெரும் பங்கு வகிக்கிறது.

பக்கம்...32

மழை நீர் சேகரிப்பு

ஒவ்வொரு மழைத்துளியும் மகத்தானது!

PHRD நிதி வழங்குதல்

தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் புதுவாழ்வு திட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மானூர், குருவிக்குளம், வாசுதேவநல்லூர், சங்கரன்கோவில், கடையநல்லூர் மற்றும் மேல் நீலித நல்லூர் ஆகிய ஆறு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 156 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சமீபத்தில் மானூர் ஒன்றியத்திலிலுள்ள நரசிங்கநல்லூர் ஊராட்சியில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில், மானூர் ஒன்றியத்திற்குட்பட்ட 41 ஊராட்சிகளில் உள்ள மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான திட்டம் (PHRD) செயல்படுத்திட 41 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கும் ரூ. 10,27,440/– நிதி மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு. கருணாகரன், இ.ஆ.ப., அவர்களால் வழங்கப்பட்டது. ■

புதுவாழ்வு திட்டத்தின் களப்பணியாளர்களின் உதவியோடு மாற்றுத் திறனாளிகளுக்கான முகாமில் கலந்து கொண்ட மணிவேலுக்கு, அடையாள அட்டை பெற்றுத் தரப்பட்டதுடன், கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திலும் உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்பட்டு, தனிநபர் கடனாக ரூ. 10 ஆயிரம் பெற்றுத் தரப்பட்டது. இந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு பெட்டிக் கடை வைத்துள்ளார் மணிவேல்.

பொருளாதார முன்னேற்றம்

கரூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் மணிவேல். மாற்றுத் திறனாளியான இவருக்கு யாரும் எந்த வேலையும் தர முன்வரவில்லை. கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திலும் உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்பட்டு, தனிநபர் கடனாக ரூ. 10 ஆயிரம் பெற்றுத் தரப்பட்டது. இந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு பெட்டிக் கடை வைத்துள்ள மணிவேல் தற்போது மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வருகிறார். மாற்றுத் திறனாளியான தன் வாழ்வில் முன்னேற்றம் காண உதவிய புதுவாழ்வு திட்டத்திற்கு மகிழ்ச்சியுடன் நன்றி கூறுகிறார் மணிவேல். ■

ஆடுகள் வளர்ப்பில் சாதனை

தருமபுரி மாவட்டம், பேடறஅள்ளி கிராமத்தில் வசிப்பவர் மல்லிகா (வயது 40), மிகவும் ஏழ்மை நிலையில் கூலி வேலைக்கு சென்று தனது குழந்தைகளை காப்பாற்றி வந்தார். இவரின் வறுமை நிலையினைக் கண்டு புதுவாழ்வு திட்ட கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மூலம் ரூ. 18,000/– நிதி உதவி செய்யப்பட்டது. இந்தப் பணத்தைக் கொண்டு 4 ஆடுகள் வாங்கி வளர்த்து வரத் தொடங்கினார். தற்போது இவரிடம் 15 ஆடுகள் உள்ளன. வறுமையில் இருந்தும் மீண்டுள்ளார். தான் படிக்க வில்லை என்றாலும் தன் பிள்ளைகளை நல்ல முறையில் படிக்க வைத்துள்ள மல்லிகா, தனக்கு வளமான வாழ்வினை உருவாக்கித் தந்துள்ள புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் ஆகியவற்றுக்கு தன்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறார். ■

ஆலங்குளத்தில் உள்ள ஜெராக்ஸ் கடையில் மாரிமுத்து வேலை செய்து அதில் கிடைக்கும் ரூ. 1500/– மாத ஊதியத்தில் தனது வயதான தந்தையுடன் மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வந்தார்.

வெற்றிக்கு ஊனம் தடையல்ல

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை ஒன்றியம், முத்துசாமிபுரம் ஊராட்சியில் வசிக்கும் மாரிமுத்து, சிறுவயதிலேயே போலியோ நோய் தாக்குதலுக்கு ஆளான மாற்றுத் திறனாளி ஆவார். புதுவாழ்வு திட்டத்தின் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டை பெற்ற மாரிமுத்து, தனி நபர் கடனாக ரூ. 25 ஆயிரம் பெற்று, அதன் மூலம் ஜெராக்ஸ் மிஷின் வாங்கி தனியாக கடை நடத்தி வருகிறார். பின்னர் மாற்றுத்திறனாளிகளுக்காக வழங்கப்படும் தொழிற்பயிற்சி மூலம் செல்போன் பழுதுபார்க்கும் பயிற்சி பெற்று தற்போது செல்போன்கள் பழுது பார்க்கும் தொழிலையும் மேற்கொண்டு மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வருகிறார். ■

மகளிர் சுய உதவிக் குழுவினரின் நடமாடும் விற்பனையகம்

சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிரின் உற்பத்திப் பொருட்களை அனைத்துத் தரப்பினரிடமும் கொண்டு செல்லும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் நடமாடும் விற்பனையகம் மூலம் சென்னை தலைமைச் செயலகத்தில் சுய உதவிக் குழு மகளிர் தயாரிக்கும் பொருட்கள் விற்பனை செய்கிறது.

இந்த விற்பனையகத்தில் நமது பாரம்பரிய உணவு வகைகளான தினை அரிசி, சாமை அரிசி மற்றும் குதிரைவாலி அரிசி போன்றவற்றால் தயாரிக்கப்படும் தின்பண்டங்களை தலைமைச் செயலக ஊழியர்கள் அதிக அளவில் வாங்கிச் செல்கின்றனர். சாமை, தினை போன்ற அரிசி வகைகளையும், இவற்றில் தயாரிக்கப்படும் பிஸ்கட் போன்ற தின்பண்டங்களையும் தலைமைச் செயலக ஊழியர்கள் பெரிதும் விரும்பி வாங்குகின்றனர். உடலுக்கு ஆரோக்கியத்தைத் தரும் சிறுதானியங்கள் பல நூறு கிலோ அளவிற்கு விற்பனையாகியுள்ளன.

மாதத்தின் முதல் வாரங்களில் சராசரியாக தினமும் ரூ. 10 ஆயிரம் வரையிலும், மாதக் கடைசியில் சராசரியாக தினசரி ரூ. 5 ஆயிரம் வரையிலும் விற்பனை ஆகின்றன. சிறுதானியத்தில் தயாரிக்கப்படும் பிஸ்கட் போன்ற தின்பண்டங்கள் அனைத்தும் சுய உதவிக் குழு மகளிரால் சுகாதாரமான முறையில் தரமாக தயாரிக்கப்படுவதால் இப்பொருட்களுக்கு கூடுதல் வரவேற்பு கிடைக்கிறது.

இந்த நடமாடும் விற்பனையகத்தில் பொருட்களை வாங்கிச் செல்லும் தலைமைச் செயலக ஊழியர்கள் கூறும்போது, 'சிறு வயதில் நாங்கள் சாப்பிட்ட பாரம்பரிய தானிய வகைகளை காலப் போக்கில் மறந்து விட்டோம். சுவையான, சத்தான, தரமான முறையில் பாரம்பரிய தானிய வகைகள் தற்போது சுய உதவிக் குழு மகளிரால் விற்பனை செய்யப்படுவது எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. எங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு நம் பாரம்பரிய உணவு வகைகளை அறிமுகப் படுத்திய மகிழ்ச்சி எங்களுக்கு கிடைக்கிறது. இவற்றின் சுவை அனைவருக்கும் பிடித்துள்ளதால், அடிக்கடி இங்கு வந்து பல்வேறு பொருட்களை வாங்கிச் செல்கின்றோம்' என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர். ■

இந்த விற்பனையகத்தில் நமது பாரம்பரிய உணவு வகைகளான தினை அரிசி, சாமை அரிசி மற்றும் குதிரைவாலி அரிசி போன்றவற்றால் தயாரிக்கப்படும் தின்பண்டங்களை தலைமைச் செயலக ஊழியர்கள் அதிக அளவில் வாங்கிச் செல்கின்றனர்.

ஊனம் உள்ளத்தில் இல்லை!

'இரண்டு கால்களையும் இழந்து சமுதாயத்தில் என்னை ஏளனமாகப் பார்த்த போது எனக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது. அந்த நாட்களை நினைத்தாலே மனது கனக்கிறது' என்று வருத்தத்துடன் கூறுகிறார் கிருஷ்ணகிரி சிங்காரப்பேட்டை அடுத்த குருகம்பட்டி கிராமத்தை சேர்ந்த கணபதி. மேலும் அவர் கூறும்போது 'எனக்கு 25 வயதாக இருந்த போது மின்வாரியத்தில் தினக்கூலியாக இருந்தேன். மின் கம்பத்தில் ஏறும்போது ஏற்பட்ட விபத்தில் எனது இரண்டு கால்களையும் இழந்தேன். என்னுடைய குடும்பத்தாரும் எனது கிராமத்தை சேர்ந்தவர்களும் இவன் இரண்டு கால்களும் இல்லாமல் என்ன வேலை செய்யப் போகிறான் என்று ஏளனமாகப் பார்த்தனர். மற்றவர்கள் என்னைப் பார்த்து ஏதேனும் பேசினால் கூட அது எனது குறைபாட்டைக் குறிப்பிட்டு தான் பேசுகிறார்களோ என்றெல்லாம் நினைத்து வருத்தப்படுவேன். இந்நிலையில் தான் புதுவாழ்வு திட்டம் எனக்கு கை கொடுத்தது' என்று கூறினார். சிங்காரப்பேட்டை கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மூலம் ரூ. 10 ஆயிரம் தொகையை கடனாகப் பெற்ற கணபதி, பெட்டிக்கடை வைத்து தினசரி ரூ. 200/– முதல் ரூ. 300/– வரை நிரந்தரமாக வருவாய் பெற்று வருகிறார். ■

மழை நீரை சேமிக்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும்

மழை நீர் சேகரிப்பு

ஒவ்வொரு மழைத்துளியும் மகத்தானது!

தமிழ்நாடு, நீர் தட்டுப்பாடான ஒரு வறண்ட மாநிலமாகும். இந்தியாவில் 7% மக்கள் தொகையையும், 4% நிலப்பரப்பையும் தமிழகம் தன்னகத்தே கொண்டுள்ளது. ஆனால் வெறும் 3% நீர் வளமே உள்ளது. இந்தியாவின் சராசரி மழைப்பொழிவு ஆண்டுக்கு 911 மி.மீ. மட்டுமே. நாட்டின் மற்ற பகுதிகளைப் போல் தமிழகமும் தென்மேற்குப் பருவ மழையால் பயனடையவில்லை.

இதுமட்டுமன்றி பெரும்பாலான மழைப் பொழிவு அக்டோபர் மற்றும் நவம்பர் ஆகிய இரண்டு மாதங்கள் மட்டுமே ஏற்படுகிறது. வடகிழக்கு பருவ மழையை பெரிதாக நம்பி இருக்கிறோம். அதோடு நம் மாநிலத்தில் வற்றாத ஜீவ நதிகள் இல்லை என்பதும், நிலத்தடி நீரை அளவுக்கு அதிகமாக எடுக்கப்படுவதும் தீர்க்கமான உண்மையாகும்.

மாநிலத்தின் பெரும்பாலான இடங்களில் நிலத்தடி நீரின் அளவு ஆபத்தான விகிதத்தில் குறைந்துள்ளது. இதே நிலை நீடிக்குமாயின், நம் வருங்கால சந்ததியினர் குடிப்பதற்கும், பாசனத்திற்கும் நீரின்றி கடும் விளைவுகளை கூடிய விரைவிலேயே சந்திக்க நேரிடும். எனவே மழை நீரை சேமிக்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும்.

மழை நீர் சேகரிப்பு என்றால் என்ன?

மழை நீரை சேமித்து, வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்துவதும், நிலத்தடி நீரைப் புத்துயிர்ப்பூட்டுவதும் தண்ணீர்ப் பற்றாக் குறையைப் போக்கும் எளிய வழிமுறையாகும்.

சுருக்கமாக, மழை நீர் சேகரிப்பு என்பது கொட்டும் மழைத்துளிகளை வீணாக்காமல் பிடித்து வைப்பதே ஆகும். மழை நீரை தொட்டியில் சேமிக்கலாம் அல்லது நிலத்தடி நீரைப் புத்துயிர்ப்பூட்டலாம். மழை நீரை பண்ணைக் குட்டைகள் அல்லது குளங்களில் சேமித்து, கோடை காலங்களில் பாசனத்திற்கும் பயன்படுத்தலாம்.

பரவலாக, இரண்டு நோக்கங்களுக்காக மழை நீரை நாம் சேமிக்கின்றோம். மழை நீரை உடனே பயன்படுத்தும் வகையில் பாத்திரங்களிலோ அல்லது தொட்டிகளிலோ சேமிக்கலாம். முறையாக நிலத்தின் கீழ் செலுத்தி நிலத்தடி நீரை புத்துயிர்ப்பூட்டலாம்.

மழை நீரை சேமிக்க சில எளிய வழிமுறைகள்

வீட்டின் மேற்தளத்தின் / மேற்கூரையின் வாயிலாக மழை நீரை சேமித்தல்

வீட்டின் மேற்கூரையில் விழும் மழை நீரை கீழே வீணாக விடாமல், ஒரு குழியில் சிறு கூழாங்கற்களை அடியில் போட்டு, அதன் மேல் ஆற்று மணல் நிரப்பி அதன் மேல் மீண்டும் கற்கள் கொட்டி மழை நீரை அதில் விடுவதன் மூலம் சேமிக்கலாம்.

அல்லது மேற்கூரையில் விழும் மழை நீரை நேரடியாக குழாய் மூலமாக தொட்டியிலோ அல்லது கிணற்றிலோ விடலாம். ஆழ்துளை கிணறுகளில் மழை நீரை விடுவதன் மூலம் நிலத்தடி நீரை சேமிக்கலாம்.

கூரை அல்லது குடிசை வீடுகளில் மழை நீரை சேமிக்கும் முறை

குடிசை வீடுகளின் மேற்கூரையில் தார்ப்பாய்கள் கொண்டு மூடுவது மழை நீரை சேமிக்க ஏதுவாக இருக்கும். தார்ப்பாய்கள் மீது வழிந்தோடும் நீரை சேமிக்க, வீட்டின் நான்கு புறமும் இரும்பு தகரத்தை கால்வாய்கள் போல் மடித்து அவை ஓரிடத்தில் சேரும் வண்ணம் அமைக்க வேண்டும். இரும்பு கால்வாயிலிருந்த விழும் நீரை சேமிக்க மழை நீர் கால்வாயிலிருந்து தரையில் விழும் இடத்தில் கூழாங்கற்கள் மற்றும் ஆற்று மணல் நிறைந்த மழை நீர் சேமிப்பு குழியோ அல்லது ஒரு தொட்டியோ அமைத்து நீரை சேமிக்கலாம்.

ஓட்டு வீடுகளில் மழை நீரை சேமிக்கும் முறை

குடிசை வீடுகளில் மழை நீரை சேமிக்கப் பயன்படுத்தப்பட்ட அதே முறை தான் என்றாலும் இங்கு தார்ப்பாய்களால் வீட்டின் மேற் கூரையை மூடத் தேவையில்லை. இரும்பு தகரத்தினை கால்வாய் போல் வளைத்து, வீட்டின் நான்குபுறங்களிலும் அமைத்து, தகரக் கால்வாய்களின் வழியே மழை நீர் சேமிப்பு குழியிலோ அல்லது தொட்டியிலோ விழும்படி செய்து மழை நீரை சேமிக்கலாம்.

கட்டிடங்களில் மழை நீரை சேமிக்கும் முறை

வீட்டின் மேல் தளத்தில் ஒரு வடிகால் குழாய் அமைத்து, வீட்டின் மேல் தளத்தில் விழும் மழை நீரை குழாய்கள் வழியே நீர் சேகரிப்பு குழியிலோ அல்லது குடிநீராக பயன்படுத்த தொட்டியிலோ விடலாம். இவ்வகை வீடுகளில், இரும்பு தகரத்தினை கால்வாய் போர்ல் வளைத்து, ஓடுகளில் வழியும் மழை நீரை கீழே விடாமல் மழை நீர் சேமிப்பு குழியிலோ அல்லது ஒரு தொட்டியிலோ நீரை சேமிக்கலாம்.

கிணறு மற்றும் ஆழ்துளை கிணறுகளில் மழை நீரை சேமிக்கும் முறை

வீட்டில் கிணறோ அல்லது ஆழ்துளை கிணறோ இருக்கும் பட்சத்தில், மழை நீரை சேமிப்தன் மூலம் நிலத்தடி நீரையும் சேமிக்கலாம். கிணறு அல்லது ஆழ்துளை கிணற்றுக்கு அருகில் 5 அடி ஆழம், 3 அடி அகலத்தில் குழி தோண்டி, அதனுள் கூழாங்கற்கள் மற்றும் ஆற்று மணல் நிரப்பி மழை நீரை அதனுள் செலுத்த வேண்டும். அல் இருந்து வடிகட்டப்படும் நீரை கிணறு அல்லது ஆழ்துளை கிணற்றுக்கு செல்லுமாறு அமைக்க வேண்டும்.

பண்ணைக் குட்டை அமைத்து மழை நீரை சேமிக்கும் முறை

எதிர்கால நீர் தேவைக்காக மழை நீரை சேமிப்பதற்கு நிலத்தில் வட்டமாகவோ அல்லது சதுரமாகவோ தோண்டப்படும் மிகப் பெரிய பள்ளமே பண்ணைக் குட்டை எனப்படும். அதில் நீர் உள்ளே வருவதற்கு ஒரு வாய்க்காலும், எஞ்சிய நீர் வெளியே வெளியே செல்வதற்கு வடிகாலும் அமைக்கப் பெற்றிருக்கும்.

மண் அரிப்பைத் தடுப்பதற்கு குட்டையைச் சுற்றிலும் வரப்பு அமைக்கப் பெற்றிருக்கும். குளத்தின் நீளம் மற்றும் அகலமானது நிலத்தின் இருப்பு, மண்ணின் தன்மை, நீரின் தேவை மற்றும் இதற்கு ஏற்படும் ஆகியவற்றைப் பொருத்து அமையும். குட்டையிலிருந்து தண்ணீரை கைகளாலோ அல்லது மோட்டார் மூலமோ வயல்களுக்குப் பாய்ச்சலாம்.

குட்டையை அமைக்கும் இடத்தைப் பொறுத்து அதன் நீர் சேமிப்புத் திறன் அதிகரிக்கும். பொதுவாக குட்டையை வயலின் ஓரத்தில் அமைப்பது மற்ற பணிகளைப் பாதிக்காமல் இருக்கும். உதாரணமாக உழுவதற்கு ஏதுவாக இருக்கும். அடுத்தவர் நிலத்திலிருந்து குறைந்தது 3 மீட்டர் தூரம் தள்ளி குட்டையை அமைக்க வேண்டும். நீர் எளிதில் குட்டையில் சேரும் வண்ணம் அமைப்பது முக்கியமாகும்.

மழை நீர் சேமிப்பில் நாம் கடைபிடிக்க வேண்டியன மற்றும் செய்யக் கூடாதன

மழை நீர் சேகரிக்கப் பயன்படும் மேற்தளமோ அல்லது கூரையோ தூசி, பாசி, தாவரங்கள் இல்லாமல் சுத்தமாக இருக்க வேண்டும்.

தளத்தில் வர்ணம் பூசக் கூடாது. ஏனெனில் அவற்றில் நச்சுப் பொருள் கலந்திருக்கக் கூடும்.

மேற்தளத்தில் இரசாயன பொருட்களோ, துருப்பிடிக்கும் இரும்போ, உரமோ அல்லது சலவைத் தூள்களோ போட்டு வைக்கக் கூடாது.

மேற்தளத்தில் பறவைகள் கூடு கட்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ■

(தொடரும்)



அலங்கார மீன் வளர்ப்பு ஒரு சிறந்த வாழ்வாதாரத் தொழிலாக உள்ளது.

அலங்கார மீன் வளர்ப்பு

சிங்கப்பூர் போன்ற சிறிய நாடுகள் மிக அதிக அளவில் அலங்கார மீன் வகைகளை இனப்பெருக்கம் செய்து ஏற்றுமதி செய்கின்றன. நமது நாட்டில் இயற்கையாகவே ஆயிரத்திற்கும் மேற்பட்ட வண்ண மீன்கள் காணப்படுகின்றன. இவற்றினை வளர்ப்பது மிக எளிய முறையே ஆகும். கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தில் இந்த மீன் வளர்ப்பு பெரும் பங்கு பெறும் வாய்ப்புள்ளது.

நம் நாட்டு சந்தையிலும், அயல்நாட்டு சந்தையிலும் அலங்கார மீன்களின் விற்பனை அதிகரித்து வருகிறது. புகைப்படக் கலைக்குப் பிறகு சிறந்த பொழுது போக்குக் கலையாக அலங்கார மீன் வளர்ப்புக் கலை கருதப்படுகிறது.

இது குறிப்பாக, வளர்ப்போரின் மன அழுத்தத்தை குறைக்கவும், வாஸ்து போன்ற நம்பிக்கைக்காகவும் வளர்க்கப்படுகிறது. சிங்கப்பூர் போன்ற சிறிய நாடுகள் மிக அதிக அளவில் அலங்கார மீன் வகைகளை இனப்பெருக்கம் செய்து ஏற்றுமதி செய்கின்றன.

நமது நாட்டில் இயற்கையாகவே ஆயிரத்திற்கும் மேற்பட்ட வண்ண மீன்கள் காணப்படுகின்றன. இவற்றினை வளர்ப்பது மிக எளிய முறையே ஆகும். கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தில் இந்த மீன் வளர்ப்பு பெரும் பங்கு பெறும் வாய்ப்புள்ளது.

அலங்கார மீன் வளர்ப்பு பற்றிய திறன் பயிற்சி தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகம் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி மைய நிறுவனங்களில் அளிக்கப்படுகிறது. இவ்வகை அலங்கார மீன் வளர்ப்பு தொழிலில் ஈடுபடுவதன் மூலம் மாதந்தோறும் ரூ. 10,000/– வரை வருவாய் கிடைக்கும்.

குழுக்களாக அமைத்து செயல்படும் போது, மீன் தொட்டி அமைத்தல், தீவனம் தயாரித்தல், சந்தைப்படுத்துதல் ஆகியவை எளிதாக்கப்படுகிறது.

தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) போன்ற நிறுவனங்களில் கடன் பெறவும், கடல்சார் பொருட்கள் உற்பத்தி மையம் (MPEDA) மூலம் மானியம் பெறவும் முடியும்.

எனவே அலங்கார மீன் வளர்ப்பு ஒரு சிறந்த வாழ்வாதாரத் தொழில் என்பதில் ஐயமில்லை. ■

முனைவர். வெ. புருஷோத்தமன்,
வணிக மேம்பாடு மற்றும் கூட்டாண்மை வல்லுநர் II
புதுவாழ்வு திட்டம்.

தூத்துக்குடியில் அமைந்துள்ள மீன்வளக் கல்லூரி தற்போது மீன் வளப் பல்கலைக் கழகமாக வளர்ச்சி பெற்று, மீன்வள, இளங்கலை. முதுகலை மற்றும் முனைவர் படிப்புகளை வழங்கி வருகிறது.

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (77,000 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

திறந்தவெளியில் மலம் கழிப்பதால், மற்றவர்களின் கேலி கிண்டலுக்கு ஆளாவது மட்டுமல்ல.
கேடு விளைவிக்கும் நோய்கள் நம்மையும், மற்றவர்களையும் தாக்கும் அபாயமும் ஏற்படுகிறது.
கழிவறையில் மலம் கழிப்பதால், இவை அனைத்தையும் தடுக்க முடியும். எனவே,
இனி மலம் கழிக்க கழிவறையை பயன்படுத்துங்கள். திறந்தவெளியில்
மலம் கழிப்பவர்களைப் பார்த்தால், சீச்சீ என சொல்லுங்கள்.

கழிவறை உபயோகமே, வாழ்க்கைக்கு ஆரோக்கியம்.

unicef
unite for children

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH(C)/455/12-14 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2012 - 14
Date of Publication 22.05.2014

இ ந் தி ய ன் வ ங் கி

உங்கள் தொழிற்துறையின் வளர்ச்சியிலும் வெற்றியிலும் முக்கிய பங்காற்றுகிறோம்



இந்தியன் வங்கியின்
MSME
ஃ பை ன ா ன் ஸ்

வர்த்தகர்கள், குறு மற்றும் சிறு தொழில் முனைவோர்களுக்கு ஒரு பிரத்யேகமான வாய்ப்பு

● கவர்ச்சிகரமான வட்டி விகிதம் ● வாடிக்கையாளருக்கு ஏற்ற கடனுதவி
● பிரத்யேக வாடிக்கையாளர் சேவை ● விரைவான பரிசீலனை

மேலும் விவரங்களுக்கு: அருகில் உள்ள இந்தியன் வங்கி கிளையை தொடர்பு கொள்ளவும்.

கார்பரேட் அலுவலகம்:
254-260, அவ்வை சண்முகம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014.
மின்னஞ்சல்: indmail@indianbank.co.in
கட்டணமில்லா தொலைபேசி: 1800 425 00 000
இணையதளம்: www.indianbank.in

इंडियन बैंक
இந்தியன் வங்கி
உங்கள் தொழில்நுட்பநேய வங்கி